தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

அவள்:

காத்திருந்தேன் உங்களுக்கே!
கண்விழித்தேன் இராப்பகலாய்!
பூத்திருக்கும் முல்லைமலர் இங்கே!-எழில்
பொங்குகின்ற நெஞ்சநினை வெங்கே?

அவன்:

தலைநிமிர்த்த நேரமில்லை;
தனிநலத்தில் நாட்டமில்லை;
விலையுரைக்கப் படுந்தமிழை எண்ணி-நெஞ்சம்
வேகுதடி; வேகுதடி; கன்னி!

அவள்:

காதலென்ன கல், இரும்பா;
காலமெல்லாம் பூத்திருக்க-?
சாதல்வரு முன்னே-இள வேனில்-ஒளி
சாம்பிவிட்ட பின்னே-முது வேனில்!

அவன்:

பூமணமும் மோப்பதில்லை;
புத்திளமை ஈர்ப்பதில்லை;
நாமணக்கும் தமிழ்த்துயரை எண்ணி-உடல்
நாளமெல்லாம் கனன்றதடி கன்னி!

அவள்:

முத்தமிழை நோகவில்லை;
முகங்கடுத்துங் கேட்கவில்லை;
முத்தமழை பொழிந்திடலா காதா?-அன்பு
முகைவிரிதல் செந்தமிழ்க்குத் தீதா?

அவன்:

அகத்துறைக்குப் பஞ்சமில்லை;
அன்புவளம் கொஞ்சமில்லை;
மிகுத்த துயர் தமிழ்மொழிக்கே இன்று!-துயர்
மீட்டிடவே நாம்முனைதல் நன்று!

அவள்:

மீட்டிடத்தான் வேண்டுமெனில்
மின்னிழையைத் துறப்பதென்ன?
கூட்டிலடை பட்டகிளி யோ, நான்?-என்
கொள்கை, உயிர் யாவுந்தமி ழேதான்!

அவன்:

அப்படித்தான் செப்படியோ!
ஆண்டதமிழ்ப் பொற்படிவே!
எப்படிக்கும் முதற்படியே தமிழ்தான்-அடி
இப்படிவா; இனியுன் இதழ் அமிழ்தாம்!

சுவடி: 7
ஓலை: 8.
விலை 75 காசு.

www.thamizham.net - Free E book No 7419

நமக்கு வந்த மடல்கள்.

153: ஐயா! இத்திங்கள் தென்மொழியில், செல்வச் செருக்காலும் பண்பிழப்பாலும் உள்ள பொருளியல் இழிநிலை பற்றியும், இப்போக்கினை மாற்ற வழி பொதுவுடைமைக் குமுகாய அமைப்பை ஏற்படுத்த முனைவதுதான் என்ற தங்கள் உறுதி பற்றியும், அதனை அமைப்பதற்கான இயக்கங்கள் இந்த மண்ணுக்குரிய சில தனித்த பண்புகளை நிலைமைகளைக் கருத்திற் கொண்டு அதற்கேற்பச் செயல்படுவதுதான் வெற்றிக்கு வழியென விளக்கியும் எழுதியது தாங்கள் இக் கருத்தினை எவ்வளவு காலம் எவ்வளவு நுணுகி ஆராய்ந்து வந்திருக்கிறீர்கள் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனியெனக் காட்டுகிறது. மிக்க மகிழ்ச்சி! **—இளங்கோ, தேனகம், திண்டுக்கல்.**

154: பெருமதிப்பிற்குரிய ஐயா! தாங்கள் திங்கள்தோறும் வெளியிட்டுவரும் 'தென்மொழி'யைப் படித்துப் பயனடைபவர்களில் நானும் ஒருவன். அடுக்கிவரும் துன்பங்களையும் பொருட்படுத்தாது முயற்சி ஒன்றால் உழைத்துவரும் தங்களின் உள்ளத்தையும் உறுதியையும் கண்டு வியப்படைகின்றேன். தமிழ்மொழியின் சிறப்பை மக்கள் உணர அரும்பாடுபடும் தங்களின் தமிழ்நெஞ்சை என் மனமாரப் பாராட்டுகின்றேன். தங்களின் தமிழ்த்தொண்டு மேன்மேலும் சிறப்படைய வேண்டுமென்பதே என்னனையோரின் எண்ணம்.

—மு. சிவசந்திரன், திருப்பனந்தாள்.

155: தென்மொழி மடங்கல் இதழில் தாங்கள் வரைந்த "பொதுவுடைமை ஒரு நாட்டின் தனி உடைமையன்று", என்ற ஆசிரியவுரையின் கருத்தை அறிந்து அளவிடற்கரியமகிழ்ச்சி கொண்டேன். தங்கள்பால் யான் கொண்டுள்ள பற்று பதின்மடங்கு மிகுதியாயிற்று. மொழி ஆய்வில்தான் தாங்கள் சிறப்புப் பெற்றவர் என எண்ணமிட்ட என் சிறுமை எண்ணம் சிதறிற்று. பொதுவுடைமைத் தன்மைகளைப் பொதுவுடைமைக்காரர்களே புல்லரிக்கச் செய்துவிட்டீர்கள். எழுத்துக்கு எழுத்து. வரிக்குவரி பொதுவுடைமைக் கருத்துகளைத் தெள்ளத்தெளிய வெள்ளிடைமலை எனக் காட்டியிருக்கும் தங்களின் ஆய்வே தனி. தங்கள் கூற்றில் பொது உடைமைக் கொள்கை, குமுகாய அமைப்பினுல்தான் உருவாகிறது என்பதையும், குமுகாய அமைப்பின் வழியே அந்தந்த நாட்டிற்கு ஏற்றாற்போல் சில சீர்திருத்தங்கள் செய்து அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் அறிவுசான்றவர் ஏற்கவே செய்வர்.

நம்நாட்டில் உள்ள தனியுடைமையர் சிலர் தங்களைப் பொது உடைமைக்காரர்கள் எனக் கூறிக்கொண்டுள்ளனர். இவர்கள் வெறும் பேச்சுகள் பேசுவதும் வீணர்களுடன் குலாவுவதும் கண்கூடு. இது போன்றவர்கள் நம் மொழிக்கு ஊக்கம் தருவது எவ்வாறுகும்? அத்துடன் மொழி அமைப்பிலேதான் குமுகாய ஒருமை காண இயலும் எனத் தெளிவாகத் தாங்கள் உறுதிப்படுத்தியிருத்தல் உள்ளங்கை நெல்லிக்கனி என உளறுவாய்ப் பொதுவுடைமையர்களுக்கு நல்ல விளக்கமாய் அமையும். வெளிநாட்டினை உவமைப்படுத்தியே தம் அடிமை உணர்வினைக் காட்டும். அவர்கள் இனிமேலாவது தாங்கள்

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்)

www.thamizham.net - Free E book No 7419

தென்மொழி

இலக்கிய இதழ்

''கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 7: ஓலை 8.

கன்னி தி. பி. உ000 (1969. -செப்டம்பர்-அக்டோபர்)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

இந்தியாவின் அரசியல் வீழ்ச்சியும் தமிழனின் விடுதலை எழுச்சியும்!

இந்தியக் குடியரசு வரலாற்றிலேயே இதுவரை ஏற்பட்டிராத பெரியதோர் அரசியல் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதை இன்று நாட்டைப் பற்றியும் மக்களைப் பற்றியும் எண்ணிக் கொண்டிருப்பவர் அத்தனைப் பேரும் உணர்ந்து வருந்துகின்ற நேரம் இது. இந்திய அரசியல் அமைப்பில் வலிந்ததும் மிகப் பெரியதுமான பேராயக்கட்சியின் தாய்ச்சுவரிலேயே வெடிப்பு கண்டுள்ளது! அடிமரமே பிளவுபட்டுள்ளது. இப்பிளவு அதிகாரச் சார்பினது மட்டுமன்றிக் கொள்கைச் சார்பினதுமாகும் என்று இருதரப்பினரும் பன்னிப்பன்னி உரைத்து வருகின்றனர். கட்சித்தலைவரும், ஆட்சித் தலைவரும் தங்களின் கட்சியை மட்டு

www.thamizham.net - Free E book No 7419

மன்றி மக்கள் கூட்டத்தையே கூறுபோட்டுப் பிரிக்கத் தொடங்கி விட்டனர். பிரிக்கத் தொடங்கியதோடமையாமல் தம்தம் பங்குகளின் வலிவு மெலிவுகளையும் எடைபோடத் தொடங்கிவிட்டனர். ஒற்றுமை என்றும் ஒருமைப்பாடு என்றும் பேசிய கட்சி மேலாண்மையும் ஆட்சி யதிகாரமும் இன்று ஒற்றுமை குலைந்து ஒருமைப்பாடு சிதைந்துள்ள நிலைக்கு வந்துவிட்டன. மக்களைத் திருத்தவேண்டும் என்று வேண்டிக்கொண்டவர்கள் மக்கள் திருத்தியும் திருந்த முடியாத அளவுக்கு இழிந்துவிட்டனர். அமைப்பும் அதிகாரமும் ஒன்றையொன்று அழிக்கத் தொடங்கிவிட்டன. கணவனும் மனைவியுமாக இயங்கவேண்டிய கட்சியும், ஆட்சியும் பிரிவினை மனப்பான்மையுடன் தம்முள் வாய்ச் சண்டையும் கைச் சண்டையும் போடத் தொடங்கிவிட்டன. குடியும் குடித்தனமுமாக விரிந்து சிறக்கவேண்டிய இப்பெற்றோர்களின் கடும் போராட்டங்களைப் பார்த்துப் பிள்ளைகளாகிய மக்கள் மருண்டு திகைப்புண்டு என்ன செய்வதென்று அறியாமல் கூனிக்குறுகிப் போய்விட்டனர். மொத்தத்தில் இந்திய அரசியல் அமைப்பே ஆட்டங்காணத் தொடங்கிவிட்டது. இந்நிலை இந்தியாவிற்குப் பெரியதோர் அரசியல் வீழ்ச்சி என்பதை எவரும் மறுக்க முடியாது.

இன்றுவரை தமிழகம் இந்தியாவின் ஒரு பகுதி யாதலின் இந்திய அரசியல் அல்லது பொருளியல் அல்லது குமுகாய வீழ்ச்சி எந்த அளவினதாயினும் அந்நிலை தமிழகத்தையும் ஓரளவு தாக்கவே செய்யும். எனவே இந்தியாவின் நடுவணரசில் ஏற்படுகின்ற மாற்றங்கள், கட்டுக்குலைப்புகள். அல்லது சீர்குலைவுகள் தமிழகத்திலும் ஒருவகை மாற்றத்தை, ஏற்படுத்தியே தீரும். இந்திய அரசியலில் இக்கால் ஏற்பட்ட குமட்டல் கொந்தளிப்புகளும் அதிகாரப் பொருமல்களும் தமிழகத்தையும் தாக்கியுள்ளதாக நாம் கருதிக் கொள்ளுதல் வேண்டும். ஆகையால் இந்திய அரசியலின் செரிமானக் குறைவுகள் நம் ஆராய்ச்சிக்குகந்த முழுப்பொருளாக அமையாவிடினும், தமிழகத்தை இந்த நிலை எந்த அளவு தாக்குகின்றதோ அந்த அளவுக்கு நாம் இதைப்பற்றிக் கவலைப்பட்டாகல் வேண்டும். கப்பலில் ஓட்டை ஏற்பட்டு அது முழுகவேண்டிய நிலையில், அதில் அடிமையாக்கப் பட்டுக் கிடக்கும் ஓர் அரசியல் அடிமை, கப்பல் மூழ்கிவிட்டால் என்ன செய்வது என்று எந்த அளவில் வருந்துவானோ, அந்த அளவில் நாமும் வருந்தியாக வேண்டி உள்ளது. எனவே பேராயக்கட்சியின் பிளவு அக்கட்சிக்காரன் ஒருவனை எவ்வளவு வருத்துமோ அந்த அளவு இல்லாமற் போயினும், அக்கட்சியின் நடுவணரசு ஆளுகைக் குட்பட்டுக் கிடக்கும் நாம் அதன் கட்டுக்குலைவை எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது. இந்த நிலை நமக்கு ஒருபுடை தீமையாகவும் ஒருபுடை நன்மையாகவுமே அமையலாம்.

பொதுவாக நம்மை—அஃதாவது தமிழர்களைப் பொறுத்த அளவில் நாம் வடநாட்டானின், அஃதாவது நடுவணரசின் அரசியல்

www.thamizham.net - Free E book No 7419

அடிமைகளே. நாம் அடிமைகள் ஆகமாட்டோம் என்று நினைக்கும் அளவிற்கு நமக்குள்ள உரிமைகளில் எதுவும் நமக்கு உறுதிப்படுத் தப்படவில்லை. அரசியல் சட்டங்களில் எவ்வளவோ பேசப்பட்டிருக்க லாம்; ஆனால் அவற்றின் நடைமுறைகள், அவ்வரசியல் சட்டங் களையே பொருளற்றவையாகச் செய்துள்ளன. எனவே பேராயக்கட்சி ஒரு யானையின் அளவிற்கு வலிமை பெற்றாலும் சரியே, அல்லது ஒரு பூனையின் அளவிற்கு மெலிவுற்றுப் போனாலும் சரியே, நாம் அக்கட்சி யின்—அஃதாவது அக்கட்சிப் பெரும்பான்மையின்—அஃதாவது அக் கட்சியை ஆட்டிப்படைக்கும் வடநாட்டாரின்—இந்திக்காரரின் அடி மைகளே. அந்த அடிமைக் கூட்டத்திற்குத் தலைமை என்று கூறிக் கொண்டு ஓர் அநும பக்தவத்சலம் போனாலும் சரியே—அல்லது ஒரு விடண சுப்பிரமணியம் போனாலும் சரியே, அல்லது ஒரு சுக்ரீவக் காமராசு போனாலும் சரியே, வடநாட்டானிடம் நமக்கென்று ஒரு தனிப் பெருமை, இன்றன்று, இனி என்றும் வரப்போவதில்லை. இந்தி ராவின் இனத்தை இன்று நேற்றன்று, ஏறத்தாழ மூவாயிரமாண்டுக ளாகத் தமிழன் நம்பிப்பார்த்துவிட்டான். அந்த அம்மையினத்தாரின் குருதியில் என்றைக்கும் அழுத்தம் குறைந்ததே இல்லை. அது முன் னேற்றப் பேராயக்கட்சி என்று பேசினாலும் சரி; அல்லது உண்மைச் சமவுடைமைக்கட்சி என்றுகூறினாலும்சரி; அல்லது பொதுவுடைமைக் கட்சி என்று கூப்பாடு போட்டாலும் சரி; அந்த அம்மையாரின் குரலையும் தமிழர்கள் நம்பவேண்டியதில்லை; அவரின் எழுத்தையும் தமிழர்கள் ஒப்பவேண்டியதில்லை. அவர் ஒரு முழு ஆரியப் பார்ப்ப னத்தி. நம்மைப் பொறுத்தவரை ஆரியப்பார்ப்பனனுக்கு இருக்கின்ற இனப்பாங்கைவிட ஆரியப் பார்ப்பனத்திக்கு இருக்கின்ற இனப் பாங்கு இரண்டு மடங்காகவே இருக்கின்றது என்று சொல்லலாம். பேச்சில் பேசலாம் அல்லது எழுத்தில் எழுதலாம்; "பார்ப்பனர்கள் இன்று திருந்திவிட்டனர்; நேற்றுப்போல இல்லை" என்று. ஆனால் பார்ப்பனன் என்றும் திருந்தான். அது நிலவுலகமானாலும் சரி; நிலா வுலகமானாலும் சரி. இந்திர, பிரம்ம உலகங்கள் ஆனாலும்சரி. அங் குள்ள பார்ப்பனனும் பூணூலைத்தான் போடுவான். பார்ப்பனத்தியும் பார்ப்பானுக்கு மேலாகத்தான் இருப்பாள் அவர்கள் வேலை உட்காய்ச் சல் போன்றது. அவர்களிடம் காமராசரின் அரசியல் தந்திரமும் செல்லாது; கருணாநிதியின் அரசியல் மந்திரமும் ஏறாது. காமராசர் இந்த வகையில் தம் தோல்வியை உணர்ந்துவிட்டார். கருணாநிதி இனி உணர்வார். இந்திராவின் கண்ணடிக்குக் காமராசும், கருணா நிதியும், சுப்பிரமணிய, பக்தவத்சலங்களும் இன்னும் யாவரும் கறுப் பாகத்தான் தோன்றுவர். அதில் எள்ளளவும் ஐயப்பாடில்லை. கார ணம் இந்தியாவில் நடப்பது முழு அரசியல் அன்று; ஆரியவியல் கலந்த அரசியல்!

ஆகவே தமிழர்கள் இத்தகைய அரசியல் வண்ண மத்தாப்பு களின் வெளிச்சத்தில் தங்கள் மேனி யழகுகளைப் பார்த்து மகிழ்ந்து

www.thamizham.net - Free E book No 7419

கொண்டிருக்க வேண்டா. அவர்தம் நோக்கமும் கொள்கையும் தம் இனம் வீழ்த்தப்பட்டதையும், தம் பெருமை சாய்க்கப்பட்டதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். இவற்றைப் பற்றி அறிவுணர்ச்சியற்ற உடம்புகளும், வினையுணர்ச்சியற்ற மேனிகளும் வேண்டுமானால் "அவன் நல்லவன்; இவன் வல்லவன்; அவன் சொத்தை, இவன் சொள்ளை" என்று சொல்லிக்கொண்டு திரியட்டும். மானமுள்ள நாம் நம் அடிமைத்தனத்தினின்று விடுதலை பெற்றாக வேண்டும். அரசியல், பொருளியல், குமுகாயவியல் அல்லது பண்பாட்டியல் மொழியியல் முதலிய நிலைகளினின்றும் நாம் விடுதலைபெற்றாக வேண்டும். இவ்வத்தனைத் துறைகளிலும் நாம் முன்னேறியாகவும் வேண்டும்.

எங்காவது எவனாவது "தமிழ் முன்னேறிவிட்டது; தமிழ் ஆளுகிறது; தமிழ் வாழுகிறது; அங்கு தமிழ்; இங்கு தமிழ்"—என்று சிலம்பாடுவானானால் அவனுக்காக இரக்கப்படுங்கள். அவனிடத்தில் இப்படிக் கூறுங்கள்: "ஐயா, தமிழரே! தமிழ் எவ்வளவு முன்னேறியிருக்கின்றது என்று கூறுகின்றீரோ; அவ்வளவில் அது வீழ்த்தப்படவிருக்கின்றது. மணலுள் நட்ட மரம்போல விரைவில் சாய்ந்துவிடப் போகின்றது. ஏனென்றால் நீர் கூறும் முன்னேற்றத்தில் அடிப்படை என்பது எள்ளத்துணையும் இல்லை; உண்மையில்லை; இனி விளைந்து போகவேண்டிய எருவில்லை; அதன் பருமையில் திண்மையில்லை; அதன் பளபளப்பு உடலின் ஒளியன்று; நோயின் மினுக்கு மொத்தத்தில் தமிழ் "சட்டிக்குத்தப்பி நெருப்பில் விழுந்த கதை"—என்று விளக்கிக்காட்டுங்கள். விளங்கிக்கொண்டால் போகட்டும்; விளங்காவிட்டால் கவலைவேண்டா. பக்தவத்சலத்தின் கொடியைவிட உயரமாகப் பறந்த கொடி வேறில்லை; காமராசரின் ஒருகை கன்னிபாகுமரி முனையையும், மறு கை பனிமலை உச்சியையும் தொட்டுக் கொண்டிருந்தது; அவர் கால்கள் இந்தியாவைச் சுற்றிச் சுற்றி நடையிட்டன. இன்று அவர் தம் கைகால்களை முடக்கிக்கொண்டு நிசலிங்கப்பாவின் வீட்டுத் திண்ணையில் முடங்கிக்கொண்டு கிடக்கின்றார். இப்படிப் பெரிய பெரிய அரசியல் மூளைகளெல்லாம் ஆரியமாயையிலும் சாணக்கியச் சேற்றிலும் சிக்குண்டு புதையுண்டு மூழ்கிப் போயின. இவர்கள் எம்மாத்திரம்? வற்றிய ஓலை கலகலக்தும்; என்றென்றும் பச்சோலைக்கில்லை ஒலி என்பது அழிக்கமுடியாத உண்மை.

எனவே தமிழா, "நாம் முன்னேற்றம் அடைந்துவிட்டோம். இனி நமக்கு வேறொன்றும் வேண்டுவதில்லை; நடப்பது நம் தமிழக ஆட்சி; ஆளுவது நம் தமிழன்" என்றெல்லாம் கனவுலக வாழ்க்கையின் காட்சியில் இறுமாந்து போகாதே! பேராயக்கட்சியும் தொலைந்து விட்டது. காமராசும், பக்தவத்சல சுப்பிரமணியங்களும் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு கால்முறிந்து கிடக்கின்றனர் என்று பெருமைப்படாதே; என்றைக்கும் உன்னால் வீழ்த்தப்படாத ஆரியம் உன் நடவடிக்கைகளில் எது சரியோ அதற்குப் புறத்தே பாராட்டும்

www.thamizham.net - Free E book No 7419

அகத்தே குழிப்பறிப்பும், எது தவறோ அதற்குப் புறத்தே கண்டிப்பும், அகத்தே தூண்டுதலும் செய்து கொண்டுள்ளது. ஆகையால் மொழியறிவற்ற நீ, வரலாற்றறிவு காறு நீ, ஆட்சித்தருக்குக் கொண்ட நீ, உன் பாட்டன் பூட்டன்களாகிய பாண்டிய, சோழ, சேரர்களைவிடத் தோள்வலிவற்ற நீ, அவர்களாலேயே சாய்க்கவியலாத ஆரியத்தைச் சாய்த்து அதன் வாயைக் கிழித்து விடுவாய் என்று, நீ—ஏதுமற்றநீ, நினைப்பாயானால் அதன் அறியாமைக்குத் திருவள்ளுவரின் கல்லறை சிரிக்கும்; சிவஞான முனிவரின் கல்லறை நகைக்கும்; மனோன்மணீயம் சுந்தரனாரின் கல்லறை எள்ளும்; பா. வே. மாணிக்கனாரின் கல்லறை இரங்கும்; மறைமலையடிகளின் கல்லறை இகழும்; சோமசுந்தர பாரதியாரின் கல்லறை ஏசும்; பாவேந்தர் பாரதிதாசனின் கல்லறை ஏங்கும். ஆகவே உனக்குத் தேவையான உண்மையான விடுதலை கிடைப்பதற்குமுன் நீ உன் முயற்சிகளில் ஒருசிறிதும் பின்னடைய வேண்டா.

இந்தியாவில் இக்கால் ஏற்பட்டிருக்கும் அரசியல் வீழ்ச்சி, உன் விடுதலை-எழுச்சிக்கு வித்திட்டிருக்க வேண்டும். உன்நிலை முன்னையினும் இப்பொழுது மிகவும் இரக்கத்திற்குரியது. ஓய்விருந்தால் இந்திய வரலாற்றைச் சற்றே திருப்பிப் பார். அரசர்கள், அதிகாரத்திலிருந்தவர்கள் தங்களுக்குள் அடிபிடிச் சண்டைகள் நடத்தியவற்றிற்கு யார் காரணர்களாக இருந்திருக்கின்றனர் என்றுபார். அங்கு நடந்துள்ள வீழ்ச்சிகளெல்லாம் எந்தெந்தச் சூழலில் நடந்தன என்பதை உன்னிப்பாகப் படித்தறி. எடுத்துக்காட்டிற்கு ஒரு நிகழ்ச்சியைத் தருகின்றேன். நாகப் பேரரசின் வரலாறு உனக்குத் தெரிந்திருக்கும். அதை நிறுவியவர்கள் "நந்தர்கள்" என்றழைக்கப்படும் ஒன்பது நந்தர்கள். அவர்கள் எண்பத்துமூன்று ஆண்டுகளாக இந்தியாவில் ஆரிய இனத்தை அலற அடித்தவர்கள். அவர்களின் 'புராண', 'இதிகாசங்களை'க் கொளுத்தியவர்கள்! அவர்களுள் கடைசி அரசனை 'நந்தன்' என்பவன் ஆரியர்களை மிகவும் அடக்கி ஆண்டான் என்பதற்காக, "விஷ்ணுகோபன்" என்னும் ஓர் ஆரியப் பார்ப்பனன் அவர்களைச் சந்திரகுப்தன் என்னும் மௌரியனைக் கொண்டு வீழ்த்தினான் என்பது வரலாறு. நந்தன் ஆரிய எதிரி. சந்திரகுப்தன் ஆரிய அடிமை. நந்தன் ஆரிய இறைமறுப்புக்காரன்; சந்திரகுப்தன் ஆரிய இன வழிப்பாட்டுக்காரன், 'நந்தன்' என்னும் அந்த சைசுநாக இனத்தின் கடைசிப் பேரரசன் மிகவும் ஆற்றல் வாய்ந்தவன்தான். அவனிடம் இருபதினாயிரம் குதிரைப்படைகளும், இருநூறாயிரம் காலாட் படைகளும், இரண்டாயிரம் தேர்ப்படைகளும், நான்காயிரம் யானைப் படைகளும் இருந்தன அவனுக்கு அக்காலத்திருந்த தென்னக அரசர்களின் துணையும் இருந்ததாக வரலாறு உரைக்கின்றது. அத்தகைய வல்லானை, பேரரசனை, அவன் ஆரியர்களிடம் அடங்கவில்லை, மாறாக அவர்களை அடக்கியாண்டான், என்னும் ஒரே கார

www.thamizham.net - Free E book No 7419

ணத்திற்காக, சந்திரகுப்தன் என்னும் ஓர் அறியாச் சிறுவனைக் கொண்டு சூழ்ச்சியால் வீழ்த்தியவன் ஓர் ஆரியப் பார்ப்பனன். அவன்தான் "விஷ்ணுகோபன்" அவன்தான் பிற்காலத்தில் 'சாணக்கியன்' என்று தன் பெயரை மாற்றிக்கொண்டவன். அவன்தான் "கௌடில்யன்" அவன் எழுதிய 'அர்த்தசாத்திரத்தின்' இறுதியில் காணப்படும் இவ்வரி வரலாற்றுப் புகழ்பெற்றது. அஃது இது: "(ஆரியர்க்கு வந்த) கொடுமைகளிலிருந்து புனித ஏடுகளையும் (சாத்திர, புராணங்களையும்), போர் நூல்களையும் (ஆரியன் தந்திர நூல்களையும்) (ஆரியரை எதிர்க்கும்) நந்தரின் வயமாகிவிட்ட நாட்டையும் எவன் காப்பாற்றினானோ, அவனால் (அந்த விஷ்ணுகோபனால்) இந்த (அர்த்த) சாத்திரம் (புனிதநூல்) இயற்றப்பட்டது."

(இந்திய வரலாறு: வின்சென்ட் ஏ. சுமித்: பகுதி. 1. பக்: 166)

அத்தகைய சூழ்ச்சியும் வஞ்சமும் கரவும் நிறைந்தவர்கள் ஆரியப் பார்ப்பனர்கள். அவர்களினத்தில் வந்த பெண்ணொருத்தியின் தலைமையைப் பார்ப்பனர்களும் அவர்களைச் சுற்றியுள்ள அதிகார வெறியர்களும் எவ்வாறு முட்டுக்கொடுத்துத் தாங்குகின்றனர் என்பதைத் தன்னுணர்வும் தன்மானமும் தன்னாண்மையும் மிக்கவர்கள் நன்கு அறிவர். பதவிப்பித்தர்களும், அதிகார மயக்குற்றவர்களும் கவலைப்படார். மறைந்த அறிஞர் அண்ணாவின் 'ஆரியமாயை' நூலின் கருத்துகளை அவர் மூளையிலிருந்து மறைந்து போகுமாறு அல்லது செயலற்றுப் போகுமாறு செய்தவர்கள் ஆரியப்பார்ப்பனர்கள். இல்லையானால் அதுபோன்ற ஒரு நூலாசிரியரை ஆட்சிக்குக் கொணர்ந்த பயனை அந்த நூல் பெற்றிருக்கவேண்டும். வெளிப்படையாகச் சொன்னால் அவர் காலத்தில் நம் குமுகாயக் கொள்கைக்கே உலை வைக்கப்பட்டது. இக்கால் நம் அரசியல் கொள்கையே ஆட்டங் கண்டுள்ளது. பக்தவத்சலமும் சுப்பிரமணியமும் முழு ஆரிய அடிமைகள் என்பதை வரலாற்றிலிருந்து எந்த நிலையிலும் அழித்துவிட முடியாது. அவர்கள் ஆரிய அடிமைகள் மட்டுமல்லர்; தமிழர்களின் பகைவர்கள். நாம் எதையோ எண்ணிக்கொண்டு எவருக்கோ போடும் பூமாலைகள், அப்படிப்பட்டவர்களின் கழுத்துகளில் போய் விழுகின்றன என்றால், நம் அரசியல் கொள்கையும் வீழ்ச்சியுறுங்காலம் நெருங்கிற்று என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்? இத்தகைய சூழ்ச்சிக்குப்பைகளை இப்படியே கிளறிக்கொண்டே போவோமானால், அவற்றில் நாம் தொலைத்த கொள்கை மணிகள் இன்னும் எத்தனையெத்தனையோ மின்னிக்கொண்டிருப்பதைக் காணலாம். எனவே இந்த நிலையில் நாம் செய்யவேண்டுவது என்ன என்பதை மட்டும் ஒரு முறை நினைவூட்டிக்கொள்ள வேண்டும்.

தமிழகம் தன்னாட்சி பெற்றாலன்றித் தமிழும் தமிழனும் நாளைக்கன்று, இன்னும் ஆயிரமாண்டுகள் போனாலும் இப்படியேதான் இருத்

www.thamizham.net - Free E book No 7419

தல் முடியும். அவ்வப்பொழுது எவராகிலும் சில பக்தவத்சல சுப்பிரமணியங்கள் இருக்கத்தான் செய்வர். இவர்களின் காட்டிக் கொடுப்புகளினின்றும், ஆரியவடவரின் சூழ்ச்சிகளினின்றும் என்று நாம் மீட்சியுற்று நம்மைக் காத்துக்கொள்கின்றோமோ, அன்றே நாமும் வாழ்கின்றோம் என்று பொருளாகும். உலகில் அன்று தொலை நோக்கிக்கும் அகப்பட்டிராத எத்தனையோ இனங்கள், நாடுகள் இன்று தொலைக்காட்சியில் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன. அன்றுஉலகளாவிப் பெருமையுற்ற தமிழினமும் தமிழகமும், தமிழும் இன்று தேய்ந்து மாய்ந்து வருகின்றன என்பதை உலகியலறிவுற்ற ஒவ்வொரு தமிழனும் உணர்வான். போலிகள் சிலர்தாம் பெருமைப்பட்டுக் கொள்வர். அவர்தம்மை மேலும் சீர்குலைக்க ஆரிய, வடவரின் அதிகார வாய்கள் சிலதாம் அவர்களையும் அவர்களின் போக்கையும் சரி, உயர்ந்தது, சிறந்தது என்று புகழ்பாடிக் குழிபறித்துக் கொண்டிருக்கும். அவற்றின் ஒவ்வொரு பாராட்டும் நம்மை ஒருபடி கீழிறக்குகின்றது. அவற்றில் மயங்கிக் கிறங்குகிறான் தமிழன். இவன் இந்தத் தலைமுறையில் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளத் தவறுவானானால், இனி எந்தத் தலைமுறையிலும் தலையெடுக்க மாட்டான் என்பதை நெஞ்சில் பொறித்துக் கொள்ளுதல் வேண்டும். நம் மூச்சு தமிழக விடுதலை; நம் பேச்சு தமிழக விடுதலை; நம் அரசியல் கொள்கை தமிழக விடுதலை; நம் பொருளியல் கொள்கை தமிழக விடுதலை; நம் முழு வாழ்க்கையும் அதற்கே செலவிடப் பெறுதல் வேண்டும். தமிழனே!! வீழ்ந்து கிடவாதே; விழி! எழு! நட!



தமிழ்த் திருமணம்.

தென்மொழியன்பரும் தனித்தமிழ்ப் பற்றுளருமாகிய திரு. பொன். அன்பரசனுக்கும், செல்வி. பாகாயி அம்மைக்கும், மலேசியா. கூலாய். செம்பனைத் தோட்டத்தில். தி.பி. 2000, துலை கரு 29-10-69 ஆம் பக்கல் அறிவனன்று சிறப்புறத் திருமணம் நடைபெற்றது. திருமண நினைவாக மணமக்கள் சார்பில் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா 30/- விடுக்கப்பெற்றது. மணமக்கள் எல்லா நலமும் பெற்று நீடுழி வாழ வாழ்த்துகின்றோம். —அமைச்சர்

ஒரு வேண்டுகோள்.

கடுமையான புயலாலும் மழையாலும் இவ்விதழ் காலந்தாழ்ந்து வருகின்றது. அன்பர்கள் பொறுத்துக்கொள்க. —அமைச்சர்.

www.thamizham.net - Free E book No 7419

உலகத் தமிழ்க் கழக
மாநில மாநாடு!

முதலாண்டு விழா-வள்ளுவர் ஈராயிரமாண்டு விழா !
பாவாணர் திருக்குறள் தமிழ்மரபுரை வெளியீட்டு விழா !

ஆகிய மூன்று விழாக்களும் இணைந்த
அரிய பெரு விழா.

முகவை மாவட்டம், பறம்புக்குடியில் வரும் சிலை (மார்கழித் திங்கள்) 12, 13 (27-12-69, 28-12-69) காரி ஞாயிறு ஆகிய நாட்களில் நடைபெற விருக்கின்றது.

0 விழாவின் முதல் நாளில் ஊர்வலமும் முதல் ஆண்டுவிழாவும், மெல்லிசையும், மாணவர் அரங்கமும், பட்டிமன்றமும், இரவு இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

0 இரண்டாம் நாளில் பாட்டரங்கமும், 'திருக்குறள் எண்நினைவாற்றல்' (அட்டாவதான) நிகழ்ச்சியும், திருக்குறள் தமிழ்மரபுரை வெளியீட்டு விழாவும், இசையரங்கமும் நடைபெறும்.

0 மாநாட்டில் பாவாணர், தமிழகக் கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன், பெருஞ்சித்திரனார், கோ. நிலவழகனார், புலவர் குழந்தை, குன்றக்குடி அடிகளார், ம. இலெ. தங்கப்பனார், தி. வை. சொக்கப்பனார், பர். மெ. அழகனார், பர். தமிழண்ணல் மற்றும் நாடெங்கிலும் உள்ள தனித்தமிழ் நாவலர்கள் பங்கு பெறுகின்றனர்.

0 மாநாட்டில் பாவாணரின் அனைத்து நூல்களும், திருக்குறள் தமிழ் மரபுரையும், மாநாட்டு மலரும், தமிழர் நாள்காட்டியும், பழைய தென்மொழி இதழ்களும், தென்மொழியின் அண்மை வெளியீடுகள் சிலவும் கிடைக்கும்.

0 மாவட்ட அமைப்பாளர்கள், கிளைக்கழகத் தலைவர்கள், செயலர்கள், பொருளர்கள் முதலியோர் முன்கூட்டியே தம் வருகைபற்றி மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவர்க்கு அறிவிப்பது நல்லது.

0 உறுப்பினர்கள் தம் அடையாள அட்டைகளைஎடுத்துவரவும் அட்டைகளை மாநாட்டு அமைப்பாளர்களிடம் காட்டியே தமக்குரிய மார்பொட்டிகளை வாங்குதல் வேண்டும்.

பறம்பை. அறிவன்
நா. ப. தென்னகவேந்தன்
மாநாட்டுச் செயலர்கள்,

மு. தமிழ்க்குடிமகன்
வரவேற்புக் குழுத்தலைவர்.

www.thamizham.net - Free E book No 7419

நூறாசிரியம்

துரை-மாணிக்கம்.

பாட்டு-௨௦

இது கொல் விழவே; நகையா கின்றே!
புதுமடிக் கலிங்கங் கதுமத் தாங்கி
உழுந்தின் கொழுமாப் புழலை முக்கிப்
பயறு தலைப்பெய்த் பாஅல் மிதவை
வயிறு முகந்தெரிய மாந்தி உயிர்ப்பறும்
அரம்ப மாக்கள் ஆடும்
உரந்தவிர் நாளின் ஒழுகிலா நிகழ்வே!

பொழிப்பு:

இதுவோ விழா எனப் பெறுவது; நகை விளைகின்றது. புதிய மடியுடைய மெல்லுடையைப் பெருமையுடன் உடுத்து, உழுந்தினது கொழுவிய மாவினால் செய்த புழையுடைய பண்ணியத்தை மூச்சுமுட்ட உண்டு, பயறு பெரும்பான்மையுங் கலந்த பால் சேர்ந்த கும்மாயத்தை, வயிற்றின் முகமுழுதும் எழுந்து தோன்றும்படி ஆரவுண்டு, செயலற்றுத் திரிதரும் விலங்கு போல்வார் ஆடிக்களிக்கும், அறிவு விலக்கப்பெற்ற முறையிலாத செயலே!

விரிப்பு: இப்பாடல் புறம்.

புதிய உடையைப் பெருமையுடன் உடுப்பதுவும், பல பண்ணியங்களை வயிறு நிறையும்படி மாந்திச் செயலிலாது விலங்குபோல் ஆரவாரத்தோடு ஆடிக் களிப்பதுவும் ஆகிய அறிவு தவிர்க்கப் பெற்ற முறையிலாத இச்செயல் நகைப்பிற்குரியதாகுமன்றி விழா எனப்படுவதாகாது என வலியுறுத்திப் பேசுவதாகும் இப்பாட்டு.

விழா என்று பொதுவிற் குறித்தமையான் குல சமய விலக்கின்றி நடைபெறும் எல்லா விழாக்களுக்கும் பொருந்துவதாகும் இக்கருத்து.

விழவு: விழு எனும் பகுதியடியாகப் பிறந்த சொல்–விழு சிறப்பு, உயர்வு.

விழா உயர்ந்த நோக்கமும் பொதுமைப் பண்பும் மக்களிடத்துப் பரவவேண்டி அமையப்பெறுவதாகும். அவையன்றி உடுப்பதும் உண்பதும் ஆரவாரித்தலும் செயலற்றுத் திரிதலும் ஆகிய தாழ்வும் தந்நலமும் மிக்க நோக்கம் கொண்டு விளங்கும் விழாக்கள், முறை

www.thamizham.net - Free E book No 7419

யிலாத விலங்குச் செயல்களேயாம் என்று தெருட்டிக் கூறுவதாகும் இப்பாட்டு.

புதுமடிக் கலிங்கம்: புதிய மடியுடைய கலிங்கம்.

கலிங்கம்: ஆடை, கலிங்கநாட்டினின்று நெய்யப்பெற்று வந்ததாகலின் கலிங்கம் எனப்பெற்றது. பெரும்பாலும் மெல்லியதாக இவ்வாடை இருந்தமையான் மெல்லிய ஆடை என்று பொருளுரைக் கப் பெற்றது.

கதுமை;—பெருமை; கதும—பெருமையுற. புழலை-புழல் உடைய பண்ணியம். புழல்—தொளை. புழலை—வடை.

முக்கி: வயிறு முட்ட உண்டு; முக்குதல்-மூச்சுமுட்ட உண்ணு தல்.

தலைப்பெய்த—தலையாகக் கலந்த, மிகுதியாகக் கலந்த.

மிதவை—கும்மாயம், கண்ணல் வகையினொன்று.

பயறு அரிசி முதலியவற்றைப் பாலொடும் சருக்கரையொடுங் கலந்து அட்டிய நீர்மப் பண்டம் (பாயசம்). குமைதலால் கும்மாயம் என்றும், மிதத்தலால் மிதவை என்றும், கண்போல் உருண்டு திரளலால் கண்ணல் என்றும் பெயர்கள் பெறும். குமைதல்-குழைந்து வேதல்.

வயிறுமுகம்—முன்வயிறு.
மாந்துதல்—நிரம்ப உண்ணுதல்.
உயிர்ப்பு அறுதல்—வினையறுதல்,—வேலையற்றுத் திரிதல்.
அரம்ப மாக்கள்: குறும்பர்—ஒழுங்கிலா முரட்டு மாந்தர்.

அரம்பன்—Rogue எனும் ஆங்கிலச் சொல்லுக்கான பொருள் பொதிந்த தமிழ்ச்சொல்.

உரந்தவிர் நாள்: அறிவு தவிர்த்த நாள்.

பெரும்பாலான விழாக்கள் அறிவுக்குப் பொருந்துவனவாக அமையாதிருப்பது உன்னத் தக்கது.

ஒழுகிலா நிகழ்வு: முறையற்ற நிகழ்ச்சிகள்.

முடப்பழக்கங்களே பெரும்பாலும் திருவிழாக்கள் எனும் பெயரால் பெரிதும் கொண்டாடப்பெற்று வருகின்றன. இவ்விழாக்களில் உண்பதும் உடுப்பதும் ஆரவாரிப்பதும் தவிர வேறு பயன்கள் இல்லை. அறிவுக்குப் பொருந்தாத இவ் விழாவெனும் முறையற்ற நிகழ்ச்சிகள் விழாவாகா. நகைப்பிற்குரியவாம் இவை-எனும்மெய்க்கருத்து தோன் றக் கூறியதாகும் இப்பாடல்.

இது புறத்திணையும் பொருண்மொழிக் காஞ்சி என் துறையுமாகும்.

www.thamizham.net - Free E book No 7419



மதிசாலை

[ம 71] "தமிழா? தமிழ் என்றால் என்ன?"

தண்டமிழய்யா! நான் ஒரு நாள் 'இந்து' ஆங்கில நாளேட்டில் கண்ட ஒரு மடலின் சுருக்கத்தைக் கீழே தருகின்றேன்.

இலண்டனில் உள்ள, அமீலா ஆக்கிங்சு என்ற ஆங்கிலப் பெண்மணி யாது காரணியம் பற்றியோ தமிழ் நாட்டில் தங்க நேரிட்டதாம். தமிழகத்திற்குச் செல்லும் முன்பு தமிழை அறிந்து கொள்வோம் என்ற ஆர்வத்தில் அம்மாது இலண்டனில் உள்ள "இந்தியத் தூதரக"த்தினை அணுகித் தனக்குத் தமிழ் கற்றுத்தர வேண்டியிருக்கின்றாள். அதற்கு அத் தூதரகத்தில் இருந்தவர்கள் அளித்த விடை என்ன தெரியுமா?

"தமிழா? தமிழ் என்றால் என்ன?" என்ற வினாதான். (தமிழின் நிலைமை எப்படி யிருக்கின்றது! அறிந்தீர்களா?).

"தமிழ் என்றால் அஃது ஒரு தென்னிந்திய மொழி" என்று அம் மாது அவர்கட்கு விளக்கியபின், "தமிழெல்லாம் எங்களால் கற்றுத்தர இயலாது. வேண்டுமானால் இந்தி கற்றுத் தருகிறோம்" என்று கூறி விட்டனராம். இதை அப்பெண்மணி வியப்புடனும், வருத்தத்துடனும் எழுதியுள்ளாள்.

எப்படி இருக்கின்றது பார்த்தீர்களா? உள்நாட்டில் விகடன், கல்கி, குமுதங்களின் தமிழ்த்திருப்பணி! வெளிநாட்டில் இந்தியத் தூதரகத்தின் தமிழ் கற்றுத்தரும் பெரும்பணி!

தமிழா, நீ எப்போதுதான் விழித்தெழப் போகின்றாயோ? உன் வாழ்வே இருண்ட வாழ்வுதானா? நீ எப்போதுதான் ஒளிபெறப் போகின்றாயோ?

—க. காந்தி, தலைவர், உ. த. க. சேலூர், அவிநாசி.

www.thamizham.net - Free E book No 7419

[ம. 72] மாணவர்தம்மைப் பற்றித் தீய்க்கும் சாதிவெறி.

தென்மொழிக் காவல,

வணக்கம். நலம்; நலம் நாடுகின்றேன். தென்மொழி யியக்கம் ஒரு புறமிருக்க, தனித்தமிழ்த்தாளிகை நிறுவ முனைந்துள்ளமை கண்டேன். எல்லா இடர்ப்பாடுகளையும் இழப்புகளையும் எதிர்நோக்கியே இவ் வினைப்பாட்டைத் தொடங்கியிருப்பீர்களாதலால் என்னால் எவ்வகையிலும் இதுபற்றி எதுவும் எண்ணிடக் கூடவில்லை. இஃதொரு புறமிருக்க, இன்றைய மாணவர்கள் நிலைபற்றிச் சிறிது கூறவேண்டுமென விரும்புகின்றேன். ஓரளவு தாங்கள் நான் கூறவிருப்பதை யுணர்ந்திருப்பீர்களெனினும் எங்களுடன் வளரும் கொடிய நச்சரவுகளைப்பற்றிக் கூறவேண்டிய கடப்பாட்டால் இதனை யெழுதுகின்றேன்.

பெரியாரும், அண்ணாவும் சாதியொழிப்புக்குப் புரிந்த பணிகளால் ஆரிய நச்சரவு தன் ஆட்டம் ஒடுங்கி அடங்கிக் கிடப்பது ஓரளவு உண்மையே யெனினும், சிறிதுகாலமாக நாட்டில் சாதிச்சழக்குத் தன் சலசலப்பைக் காட்டாது கண்ணயர்ந்ததுபோல் காட்டிக்கொள்வது உண்மையே யெனினும், இன்றைய மாணவர்களிடையே அது தன் கொடிய திருவிளையாடலைத் தொடங்கி நாளொரு விடுதியும், பொழுதொரு கல்லூரியும் சீர்குலையுமளவு பேயாட்டம் ஆடத் தலைப்பட்டுவிட்டது. கல்லூரி விடுதிகளில் அஃது ஆழமாக வேரூன்றிக் கொண்டுவிட்டது. இவ்வாறு வளர்ந்துவரும் இளைய தலைமுறையும் தன்னைப் பலியிட்டு வருவதைப் பார்க்கும்பொழுது தமிழகத்தின் அழிவுப்படலம் அணுகி வருகின்றதோ வென்றே ஐயுற வேண்டி யுள்ளது. ஆரியத்தால் தன்மேன்மையிழந்ததமிழ்நாடு, தன்கோன்மையை யிழந்ததோடு தன் மக்களாலேயே தன் வாழ்வையும் விலைபேசி வருகின்றதோவென்றே கலங்க வேண்டியுள்ளது.

ஆயிரம் தென்மொழிகள் ஆயிரம் பெரியார்கள் கூடினும் அழிக்க முடியாத அளவுக்கு ஆரியர்கள் ஒன்றும் செய்யவில்லை யெனினும் அவர்கள் அடிவருடிகள் அதற்கும் மிகுதியாகவே செய்துவருகின்றனர். அவர்கள் செயலில் விரைவும் வினையும் வெளிப்படுகின்றன வென்றால், நம்மிடம் வெளிப்படுவன விம்மலும், வெந்துயருந்தாம்! என்ன எழுதுவதென்றே ஒடவில்லை! எனினும் இளைய தலைமுறை பாழ்படுவதை நினைக்கையில் இதன் இழிநிலைகளை யெல்லாம் எடுத்

www.thamizham.net - Free E book No 7419

துரைத்திட வேண்டும்; அதன்வழி அதன் பழிநிலை மாற்றிடத் தாங்கள் என்னனையார்க்கு வழிகாட்டுவீர்களென்ற நம்பிக்கையிலேயே இவ்வாறெழுதுகின்றேன். ஏற்றதென்று எண்ணுவனவற்றை இன்னே செய்க! இன்றேல் எதிர்காலம் இருண்டதாய் விடும் என்பதோடு மட்டுமன்று; இத்தனை யாண்டுகளாக எண்ணற்றோர் செய்த தொண்டுகள் விழலுக்கிறைத்த நீராக வீணாகிவிடுமே என்ற தவிப்பே மிஞ்சும்.

மாணவர்களிடை வளரும் இந்தச் சாதிப் படைநோய் தன்னை வெளிக்காட்டிக் கொள்ளும் வகையே தனி! ஆங்காங்கே உள்ள நிலைகளுக்கேற்ப அது தனக்கு அரசியல் வண்ணம் பூசிக்கொண்டு, கட்சிப் பற்றடிப்படையிலான மோதலாக வெளிக்காட்டிக் கொண்டிழைக்கும் வெந்துயருக்குரிய வேடிக்கைகளை விரிப்பின் பெருகும்.

இவ்விருபதாம் நூற்றாண்டிலும் கண்மூடித்தனமான கடவுட் கோட்பாட்டின்மீது கொண்டுள்ள நம்பிக்கையும், போலிமையும் புன்மையும் நிறைந்த சமயவுணர்வும், சாதி, குல அடிப்படையிலான அரசியல் கரவும் வெளிக்காட்டப்படும்வரை இவற்றின் அடிப்படையில் தம் வாழ்வை அமைத்துக் கொள்ளும் பூரிகளும், வாரிகளும் ஒழிக்கப்படும்வரை–பழிக்கப்படும்வரை இது தன் நச்சுவேக விரைவினைக் குறைத்துக்கொள்ளப்போவது மில்லை! தமிழ்நாட்டை வாழவிடப் போவதுமில்லை!

எத்தனை யெதிர்ப்புகள் கிளம்பினும் ஏற்ற வினைப்பாட்டில், ஆற்றலுடன் முன்னேறும் திண்மையும் வன்மையும் சான்ற தங்கள் திருவுள்ளம் பணிந்து வேண்டுகின்றேன்! இவற்றினை வெளிப்படுத்துங்கள். தொடர்ந்து நம்மவர்க்குப் பகுத்தறிவு கொளுத்துங்கள்! இன்றேல் முன்னேற்றப் பாதையில் முனைந்து செல்வதாக விளம்பரப் படுத்தப்பெறும் நந்தமிழ்நாடு தன் வலிவையும், பொலிவையும் ஆரியத்துக்கடிப்படுத்தியதால் தன் வாழ்வையும் முடித்துக்கொண்டதென்ற கண்ணீர் வரிகள் எதிர்கால வரலாற்றில் எழுதப்பெறும்! எனவே ஏற்றதைச் செய்க!

உண்மைத் தமிழ் உணர்வால் ஒவ்வொரு நொடியும் உளம் வேகும் உங்கள் படை மறவன்,

—சி. தமிழ்வென்றி, நெல்லை.

[ம. 73] இரு தமிழ் மணிகள்.

நான் இரண்டாம் நிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியனாக இருந்த காலத்திலிருந்தே, எனக்கு எழுத்துத் துறையில் ஓரளவு பயிற்சி யுண்டு. இந்திய அரசின் பரிசிலையும் முதியோர் இலக்கியப் போட்டி யொன்றில் பெற்றுள்ளேன். இன்னும் சில நூல்களையும் நானாகவே வெளியிட்டுள்ளேன். ஆகையால் என் எழுத்தின்மீது நம்பகம் கொண்ட பொத்தக வெளியீட்டாளர் ஒருவர் சென்ற ஆண்டு என்னை யணுகி 9-ஆம் நிலைக்கு ஏற்ப ஒரு துணைப்பாட நூல் எழுதித்தரும் படி வேண்டிக்கொண்டார். நானும் ஒப்புக்கொண்டு. "இரு தமிழ் மணிகள்" என்று தலைப்பிட்டு மறைமலையடிகள், பாரதிதாசனார் ஆகி யோரின் வாழ்க்கை வரலாற்றினைத் தூய, தனித்தமிழில் எழுதி முடித் தேன். அந்நூல் வெறும் வாழ்க்கை நிகழ்ச்சிகளை மட்டும் கொண்டி ராமல், தனித்தமிழ்க் கொள்கையின் உயிரோட்டமாக அமைந்திருந் தது.

முதலில் அதனை வெளியிடத் தயங்கிய வெளியீட்டாளர் பின் இற்றைய அரசு தமிழ்ப் பற்றுள்ளதாகையால் எப்படியும் அந்நூலுக் குப் பாடநூற் குழுவின் ஒப்புதல் கிடைத்துவிடும் என்று எண்ணி அதனை அச்சிட்டு முறைப்படி பாடநூற் குழுவினர்க்கு விடுத்தனர். ஆனால் அந்நூலுக்கு அக்குழுவினரின் ஒப்புதல் கிடைக்கவில்லை. சூத் திரன் என்னும் சொல்லின் பொருளை விளக்கி அடிகளார், "என்னரு மைத் தமிழ் மக்களே! இவ்வாறு உங்களை அழைக்க நீங்கள் ஒருப்படு கின்றீர்களா?" என்று கேட்டாரன்றோ? அந்தச் செய்தியையும், இந்தி எதிர்ப்புப் போன்ற பிற நிகழ்ச்சிகளையும் சுட்டிக்காட்டி யிருந்தேன் அந்நூலில். அதன் காரணியமாக ஒப்புதல் மறுக்கப்பட்டுவிட்டது.

ஒரு புறம் பெருமிதம்! ஒருபுறம் துன்பம்! எளியவனான யான் எழுதிய நூல் பாடப் பொத்தகமாக இருக்கத் தக்கதன்று என்று மறுத்ததன் வாயிலாக, அடியேனையும் அடிகளார் வரிசையில் சேர்த்து விட்டார்களில்லையா? அதற்காகப் பெருமிதம் அடைகிறேன். அதே சமையம் பல்லாயிரக்கணக்கான மாணவச் செல்வங்கள் "இருதமிழ் மணி"களின் சிறப்பை உணரும் வாய்ப்பை இழந்துவிட்டனரே என்று துன்புறுகின்றேன்.

www.thamizham.net - Free E book No 7419

இதனை ஏன் இவண் எழுதினேன் என்றால் இற்றைய அரசு தமிழ்ப் பற்றுள்ளதாக இருப்பினும் உள்ளே உள்ள "குஞ்சு"கள் எப் படிப்பட்டவை என்று உணர்ந்து பார்க்க வேண்டும் என்பதற்காகத் தான். தி. பி. 2000-த்திலும் இந்த நிலை நீடிக்கலாமா? ஆட்சியைப் பிடித்தால்மட்டும் போதுமா? ஆளுமையை—ஆண்மையைப் பெற வேண்டாமா? இனி, நாம் விரைந்து செயல்பட வேண்டும். ஒவ்வொரு துறையிலும் தனித்தமிழ்ப் பற்றுளர் பெருகுமாறு வினைசெயல் வேண் டும். அதற்கு வழி? தனித்தமிழ்ச் செய்தித்தாள்-நல்ல முயற்சி. வெற்றி பெறுக.

அன்பன்,

—புலவர். ச. இராமசாமி, க. இ.

(ம. 74) புதுவை வானொலியில் வால் நரர்கள்!

அண்மையில் தொடங்கப்பட்ட புதுவை வானொலி நிலையத்தில் ஆரியக் குறும்புகள் தலைவிரித்தாடுகின்றன. கோயில்தோறும் புகுந்து 'குடமுழுக்கு' விழாக்களையும். இடப்பழங்கதைகளையும் (தல புராணங் களையும்), 'நேர்முக வண்ணனை' எனும் பெயரில் வானொலிக்குள் சேர்த்து, சிறிது திருந்துகின்ற தமிழரையும் பழமைச் சாய்க்கடை யுள் முக்கி வருகின்றனர், அந்நிலையத்தில் அலுவல் பார்க்கும் சில ஊர் திண்ணிப் பார்ப்பனர்கள்! "புகழ் (துதி)ப் பாடல்கள்", ',போகிற போக்கிலே", 'சிறுவர் இல்லம்", "சான்றோர் அறவுரை (வாக்கு)", "பெண்கள் நிகழ்ச்சி", 'கருநாடக இசை" என்னும் பற்பல பெயர் களில், இதுவரை அங்கு நிகழ்த்தப்பட்ட நாடகங்கள், பேச்சுகள், நிகழ்ச்சிகள் யாவற்றிலும் மிகுதியாகப் பார்ப்பனர்களே நுழைந்து வானொலி நிலையத்தையே பார்ப்பன முடை நாற்றமடிக்கும் இழிந்த மடமாக்கி விட்டனர்.

அவர்களுக்கு ஓர் இறுதி எச்சரிக்கை!

"எத்து, புரட்டு, கரவு, சூழ்ச்சி, சுற்றுச் சார்பு, வலக்காரம் ஆகியவற்றினைக் கையாண்டு தமிழர் தம் பிழைப்பைக் கெடுத்து வரு வதுடன் இனப் பண்பையும், மொழி மானத்தையும் கெடுக்க இனியும் துணிவீர்களேயானால் புதுவை வானொலி நிலையத்தின் முன்பு கடுங் கண்டனப் போராட்டம் நிகழ்த்தப்படும். பின் விளைவுகளின் கடு மைக்கு அஞ்சித் திருந்துதலே நன்று; செய்வீர்களா?"

—த. வளங்கோ, உலகத் தமிழ்க் கழகம், புதுவை மாநிலம்.

www.thamizham.net - Free E book No 7419

(ம. 75) தனித்தமிழ்ச் செய்தித்தாள் திட்டம்.

புதுமையும், உரனும் உடைய தென்மொழி ஆசிரியரவர்கட்கு வணக்கம்.

மடங்கல் தென்மொழி இதழ் கண்டேன். அதில் வெளிவந்துள்ள தனித்தமிழ்ச் செய்தித்தாள் திட்டம் கண்டேன். விரைந்து படித்து முடித்தேன். உள்ளமும் உடலும் களிப்பில் மிதப்பதை உணர்ந்தேன் நிறைந்த இன்பச் செய்தியின் விளைவாக, ஆடிப்பாடி மகிழ வேண்டுமென்று என் உணர்வுகள் துடியாய்த் துடித்தன. மூன்றுபேராக இருந்து கொண்டு முப்பது செய்தித்தாள்கள் நடத்தும் பார்ப்பனரின் கரவுத் திறனும், அவர் தம் கொள்கை பரப்பு முறையும் காணும்போதெல்லாம், நெஞ்சு வெதும்பப்பெற்றிருக்கிறேன்.

நம்மனோர் அத்திறன் பெறமாட்டாரா என ஏங்கிக் கொண்டிருந்த என்னுயிர்க்கு, உங்களையும், உங்கள் எழுத்து வடிவங்களையும், எண்ணக் குவியல்களையும், புதுமை மலிந்த பல திட்டங்களையும், தமிழர்தம் முன்னேற்றத்திற்கு நீங்கள் இடும் செப்பமான பாதைகளையும், அறிந்து, உணர்ந்தபின், என் உள்ளமும் உடலும் இன்ப மகிழ்வால் துள்ளுவதிலும் துடிப்பதிலும் வியப்பு என்னவிருக்க முடியும்! நீங்கள் வெளியிட்டுள்ள திட்டத்தில் நானும் ஓர் உறுப்பாக விருக்க இன்றே முடிவு செய்துவிட்டேன். உறுதிமொழியை விரைவில் அனுப்பி வைப்பேன். இஃது உறுதி.

தனித்தமிழ்ப் பற்றுளன்,
-க, அரசு. பெங்களூர்-21.

அறிவிப்பு.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்கள் தொடர்பாக விடுக்கப்பெறும் எந்தத் தொகையும் ஆசிரியர் அல்லது அமைச்சர் என்று முகவரியிட்டுதான் விடுக்கப் பெறுதல் வேண்டும். தேவையானால் பெருஞ்சித்திரன் என்று பெயரெழுதி ஆசிரியர் அல்லது அமைச்சர் என்று விரிவாக எழுதி விடுக்கலாம். இவ்வாறன்றி வேறு எவருடைய தனிப்பட்டவர் பெயருக்கும் தொகை விடுக்கப்பெறுதல் கூடாது என்பதை அன்பர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ளவும்.

அமைச்சர்,
தென்மொழி, தமிழ்ச்சிட்டு.

www.thamizham.net - Free E book No 7419



பரணி இலக்கியங்கள்.

ஆசிரியர்: புலவர். சோம. இளவரசு.
தமிழ்விரிவுரையாளர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

வெளியிட்டோர்: மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

அச்சிட்டோர்: நாவல் ஆர்ட் பிரிண்டர்சு, சென்னை-14.

விலை: உருபா 3-50

தமிழில் உள்ள தொண்ணூற்றாறுவகைச் சிற்றிலக்கியங்களுள் பரணியும் ஒன்று. கடைக்கழகக் காலத்தும், அதற்கு முன்னரும் இச் செந்தமிழ்நாட்டை யாண்ட முடியுடை மூவேந்தரும், வேளிரும் மற்றும் குறுநிலமன்னர்களும் போர்க்களத்துக் கொண்ட வெற்றியை அவ்வக்காலப் புலவர்கள் சிறப்பித்துப் பாடிய செய்யுட்களைப் பதிற்றுப்பத்து, புறநானூறு, களவழி நாற்பது போன்ற இலக்கியங்களிற் காணலாம். ஆனால், போர்வல்ல புரவலனொருவன் அமரகத்துப் பகைவரைப் புறங்கண்ட வெற்றிச் சிறப்பையே கருப்பொருளாகக் கொண்ட முழுநூல் தோன்றியது கி. பி. 10-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே யாகும், அதுவே பரணி என்னும் இலக்கியம்.

நூலின் தொடக்கத்தில் ஆசிரியர், பரணி என்னும் இலக்கிய வகை தோன்றிய முறையையும் காலத்தையும் ஆராய்கிறார். பின்னர், நூற்பொருளும், பெயர்க்காரணமும், யாப்புவகையும் பற்றி விளக்குகின்றார்; பரணியின் உறுப்புகளை வகுத்துரைக்கின்றார்; பல்வேறு பரணி நூல்களில் அவ்வுறுப்புகள் எங்கனம் ஒத்தும் உறழ்ந்தும் வருகின்றன என்பதனைப் புலப்படுத்துகின்றார்.

அடுத்து, கலிங்கத்துப்பரணி, தக்கயாகப்பரணி, அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப்பரணி. பாசவதைப்பரணி, இரணியன்வதைப் பரணி, திருச்செந்தூர்ப்பரணி, சீனத்துப்பரணி. என்னும் பரணி இலக்கியங்களில் ஒவ்வொன்றின் ஆசிரியர் வரலாறு, பெயர்க் காரணம், காலம், சிறப்பு வாய்ந்த பகுதிகள் போல்வனவற்றை விரித்துரைக்கின்றார். நூலின் சிறந்த பகுதிகளைக் கூறுமிடத்து அந்நூலிலிருந்

www.thamizham.net - Free E book No 7419

தும், பிற பரணிகளிலிருந்தும் ஒப்புமை காட்டி விளக்குவது பாராட்டத்தக்கது.

இறுதியில் தமிழ்ப்பரணி, கொப்பத்துப்பரணி, கூடல்சங்கமத்துப் பரணி, கலிங்கப்பரணி, கலைசைச் சிதம்பரேசுவரர்பரணி, கஞ்சவதைப் பரணி, ஆகியவற்றை மறைந்துபோன பரணி நூல்கள் எனக் குறிப்பிட்டு, அவை எவ்வெந் நூற்றாண்டில் தோன்றியிருத்தல் கூடும் எனவும் காட்டுகின்றார். முடிவாக, பரணி படிப்பதன் பயனையும் கூறுகின்றார்.

இலக்கிய ஆராய்ச்சியைப் பொருளாகக்கொண்ட இந்நூலில் பல்வேறு பிழைகள் மலிந்து கிடத்தல் குறிப்பிடத்தக்கதாகும்.

தொடக்கத்தில் அமைந்த 'பதிப்பகத்தார்உரை' யிலேயே 'அழகுதமிழ்' "பொது பதிப்பாசிரியர்" என்னும் புணர்ச்சிப் பிழைகள் காணப்படுகின்றன.

இது நிற்க, நூலினுட் காணப்படும் பிழைகளைச் சொற்பிழை, புணர்ச்சிப்பிழை, பொருட்பிழை, இலக்கணப்பிழை, யாப்புப்பிழை, தொடர்ப்பிழை எனப் பல்வேறு பிரிவாகப் பிரிக்கலாம். இறுதியாகக் குறிப்பிடத்தக்கது அச்சுப்பிழை.

சொற்பிழை: "திறமையாகப் பெற்றுவந்த மகளிரும்" (பக்-53) என்ற தொடரில் திறை என்பது திறமை யெனப் பிழைபட்டுக் கிடக்கின்றது. மணக்குடி என்பதுஊர்ப்பெயர். ஆதலின், "மணக்குடி யாகலாம்" என வருவதே முறை. ஆனால், பக்கம் 120-இல் மணக் குடியாகலாம் எனச் சிதைவுற்றுக் காணப்படுகிறது. இச்சொல், திருவீழிமிழலை யீசர்" என்னும் தொடர் "திருவீழி மிழலை யீசர்" என வழுப்படப் பிரிக்கப்பட்டுள்ளது. "காலிக்குக் கூளி கூறியது" (பக்-34) என்னுந் தொடரில் காளி காலி யாகக் காட்சியளிக்கிறாள்!

புணர்ச்சிப்பிழை: சுட்டெழுத்துகளின்முன் உயிர் முதலாகிய சொற்கள் வருங்கால் அவ்வரசு (அ + அரசு), இவ்வியல்பு (இ + இயல்பு) எனப் புணர்ந்துநிற்றலே முறையாம், ஆயின் இந் நூலில், இகரச்சுட்டின்முன் உயிர் முதலாகிய சொற்கள் வருங்கால் இவ்அமைப்பு, (பக்-54) இவ் இலக்கியங்கள் (பக்-12), இவ் உண்மை (பக்-10)எனப்பிழைபடப் புணர்க்கப்பட்டுள்ளன. மற்றும், பெருங்கவிஞன், மதிற்புறத்தே எனப் புணர்ந்து நிற்றற்பாலவாகிய தொடர் மொழிகள், பெரும்கவிஞன் (பக்-34) மதில்புறத்தே (பக்-132) என வழுப்பட வரையப்பட்டுள்ளன.

www.thamizham.net - Free E book No 7419

பொருட்பிழை: பக்கம் 31-இல், "பரணித்தாழிசை இருசீரடி முச்சீரடி நீங்கலாக, ஏனைய சீர்களால் இரண்டு அடியால் பாடப் பெறும் பாங்குடையது" என வரைந்துள்ளார், ஆசிரியர். முதலில் இவர் எண்ணுவது அடிகளை; பின்னர்ப் பிரிப்பது சீர்களை! எத்தகைய பொருள்மாறுபாடு! இத்தொடர் "பரணித்தாழிசை இருசீரடி, முச்சீரடி நீங்கலாக, ஏனைய அடிகள் இரண்டினால் பாடப்பெறும் பாங்குடையது" என அமைந்திருப்பின் நேரியதாகும்.

பக்கம் 28-இல், "எழுநூறு யானைகளைக் கொன்ற ஏந்தலைப் பாராட்டிப் பரணிபாடுதல் கடமை எனப் பன்னிருபாட்டியல் பகர்கின்றது" எனக் குறிப்பிட்டு,

"ஏழ்தலைப் பெய்த நூறுடை இபமே
அடுகளத் தட்டால் பாடுதல் கடனே"

(பன்னிருபாட்டியல், 243)

என்று மேற்கோள் காட்டுகின்றார். முந்திய தொடரில் இவர் குறிப்பிட்ட ஏந்தலை (ஆண்களிற் சிறந்தவனை) உணர்த்தும் சொல் எதுவும் இந்நூற்பாவிற் காணப்படவில்லை. "போர்க்களத்தில் எழுநூறு யானைகளைக் கொன்றால் (பரணி) பாடுவது கடன்" என்பதுதான் இவர் காட்டிய நூற்பாவின் பொருளாகிறது. பன்னிருபாட்டியல் நூற்பா இவர் கருதிய பொருளைத் தரவேண்டுமாயின்,

"ஏழ்தலைப் பெய்த நூறுடை இபமே
அடுகளத் தட்டாற் பாடுதல் கடனே"

எனக் காட்டப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறாயின், 'அட்டாற் பாடுதல்' என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகையாகக் கொள்ளப்பட்டு, அட்டானை (கொன்றானை)ப் பாடுதல் எனப் பொருள்படும். எனவே, பன்னிருபாட்டியல் நூற்பாவை இங்கனம் பொருட்பிழை உண்டாகுமாறு பிரித்தெழுதியது, ஆசிரியரின் மொழியறிவுக் குறைபாட்டையே புலப்படுத்துகிறது.

மற்றும், பக்கம் 175-இல், பிருகலாதன் அந்தணனுக்குக் கூறியதாக இவர் காட்டும் மேற்கோளாகிய

"வானறிந்த பெயர் மண்ணறிந்த பெயர்
எண்ணிறைந்தமதி யொன்றிலா
நானறிந்த பெயர் நீயறிந்திலைகொல்?"

என்னும் பகுதியில், "மதியொன்றிலா" என்னும் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், அடுத்துவரும் "நான்" என்னும் பெயரோடு

www.thamizham.net - Free E book No 7419

முடிபுகொள்வதால், பிருகலாதன் தன்னையே : மதியில்லாதவன் என்று குறிப்பிடுவதுபோல் பொருள் தருகின்றது.

இலக்கணப்பிழை: மகள் என்னும் பெண்பாற் சொல்லுக்கு மகளிர் என்பதே பலர்பால். அங்கனமாக, மகளிர்கள் ("உரிமை மகளிர்கள்" (பக்-41) எனப் பின்னும் பன்மையீறு (கள்) சேர்த்து எழுதியுள்ளார். "தன்னை மறந்து உறங்கும் தலைவியரின்" என்னும் தொடரில் ஒருமைப்பன்மை வழுக் காணப்படுகிறது (பக்-42) 'அது' வென்னும் ஆறும் வேற்றுமை யுருபிற்குப்பின் உயர்திணைப் பெயர் வருதல் தவறாகும் என்னும் பொருள்பட,

"அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
அதுவென் உருபுகெடக் குகரம் வருமே"

எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. ஆனால் ஆசிரியரோ, "வன்மீகநாத தேசிகரது மாணவரான" [பக்-159] என எழுதியுள்ளார். இறைவனுலேயே ஏற்றுப் புகழப்பட்ட என வரவேண்டியது, இறைவனுலேயே ஏற்றுப் புகழ்ந்த [பக்-171] என வந்துள்ளது

யாப்புப்பிழை: 100-ஆம் பக்கத்தில், "காவலரீகை" எனத் தொடங்கும் வெண்பாவில்,

"... ... ... —புவியில்நிலை
யாகாப் பொருளை அபயனளித் தான்புகழாம்
ஏகாப் பொருளை அளித்தேம் யாம்"

என ஈற்றடி நாற்சீராய்க் காட்டப்பட்டுள்ளது, இஃது யாப்பிலக்கிணத்திற்கு முரண்பட்டதாகும் என்பதை யாவரும் அறிவர். இவ்வீற்றடி "ஏகாப் பொருளளித்தேம் யாம்" என இருத்தல் வேண்டும்.

தொடர்ப்பிழை: இவற்றையெல்லாம் அறிந்த அரசன் ... ... கூறினுர் [பக்-126-127]-ஒருமை எழுவாய்க்குப் பன்மை முடிபு. அதனைக்கேட்ட மங்கையர்க்கரசியார் ... ... என்று வேண்டினுள் [பக்-133]-பன்மைக்கு ஒருமை முடிபு,

அச்சுப்பிழை: கி. பி. 1635-ல் [பக்-14] காணப் படவில்லை [பக்-35] முளிவர் [பக்-40] புன்னமை [பக்-58] விழைத்த [பக்-45] தேன்றவில்லை [பக்-99], கோர்வை [பக்-90] பின்தேற்றி குரவை [90] நூலாராச்சி [பக்-107] மிளாகின்றது [பக்-151], குணங்ளகயே [பக்-152], தேகிகர் [பக்-160], இந்நிகழ்சி [பக்-169] செவவழிச்செய்தி [பக்-171] கேடடால் [பக்-178] பிறந்த தாள் [பக்-186]-இவைபோன்ற அச்சுப்பிழைகள் ஏராளம்!

www.thamizham.net - Free E book No 7419

பொதுவாக நோக்கின், இலக்கிய மேற்கோள்களை எடுத்தாளு மிடத்தும், செய்யுட்களைச் சீர்பிரித்துக் காட்டுமிடத்தும், இந்நூலாசிரியர் பெரிதும் பிழைபட்டிருப்பதனைப் பலவிடங்களில் காணலாம். இஃது இவரது மொழிப்புலமைக் குறைபாட்டையே காட்டுகின்றது.

நூலின் பதிப்பையும், சிறப்பு மதிப்பையும் நோக்குமிடத்து, உரு. 3-50 என்று விலை குறித்திருப்பது பொருந்துவதாகத் தோன்றவில்லை; உரு. 2-50 என இருக்கலாம்.

இறுதியாக ஒன்று: "தமிழுக்குப் பற்பல புதுஅணிகள் மிகுந்துவரும் இந்நாளில் நல்ல அணி நல்க நாங்களும் விரும்பினோம்" எனத் திரு. முத்துப்பழநியப்பன் குறிப்பிடுவதுபோல, இந்நூலிற் புதுமை எதுவும் இல்லை; பழமை விரும்புவோர் படிக்கலாம். —நக்கீரன்.

தமிழ்கூறும் நல்லுலகிற்கு.

ஆசிரியர்; திரு, தி. அ. கண்ணுசாமி, திருக்களம்பூர், மேலைச்சிவபுரி, திருச்சிராப்பள்ளி மா. வ.

அச்சிட்டோர்: சோதி பிரிண்டர்சு, சென்னை-1.

விலை குறிப்பிடப்படவில்லை.

தமிழின் இன்றைய வரிவடிவில் மாற்றம் தேவையென வற்புறுத்தும் நோக்கத்துடன் இச்சிறுநூலை ஆசிரியர் இயற்றியுள்ளார். அச்சுப்பொறிக்கும், தட்டச்சுப் பொறிக்கும் (Type Writer) ஏற்ற வகையில் வரிவடிவ மாற்றங்களைத் தாம் வகுத்திருப்பதாகக் கூறும் இவர், உயிர் எழுத்துகளில் இறுதியதாகிய "ஔ" என்பதனை விலக்கியும், சார்புக் குறியீடுகள் நான்கினைப் படைத்தும், புதிய முறையொன்று காட்டுகின்றார். இவர் கருத்துப்படி தமிழ் வரிவடிவம் அமையும் வகை வருமாறு:

தனிநிலை:	[∴]	1
புள்ளி:	[.]	1
மெய்:	க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்...	18
உயிர்:	அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ—	11
சார்புக் குறியீடுகள்:		10
	மொத்தம்	41

www.thamizham.net - Free E book No 7419

தமது புதிய வரிவடிவ அமைப்பின் அடிப்படையில் இவர் குறள் ஒன்றைப் பின்வருமாறு காட்டியுள்ளார்:

உ உ உ
"எப்ஒபரள் யார்யார்வாய்க் கேட்பினம் அப்ஒபாரள்
உ உ
மெய்ப்ஒபரள் காண்ப தறிவ"

மொழியாராய்ச்சி குறித்த இந்நூலில், அணைத்துயிரின், ஒருநூற்றிப் பதினொன்கு, அடித்தலமாக, பொறுத்தப்பட்டிருப்பதால், முறணுகாத, கி. பி. ஐந்தாவது Type Writter, என்பனபோன்ற பிழைகள் [அச்சுப் பிழையோ. ஆசிரியர் பிழையோ, யாம் அறியேம்!] காணப்படுதல் வருந்தத் தக்கது. காலத்திற்குகாலம், கீழ்கண்ட, அதற்கு தமிழ், குத்தாய் குறுகிற்று என்பன போன்ற புணர்ச்சிப்பிழைகளும், நாற்பத்தொன்று வரிவடிவு, உண்டுவென்பதை என்பன போன்ற இலக்கணப் பிழைகளும் மலிந்துள்ளன. —நக்கீரன்.

வாழ்க்கை ஒப்பந்தம்.

எங்கள் முதன் மகள் **செல்வி - பொற்கொடிக்கும்** *மதுரை வெற்றித் தனிப்பயிற்சிக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்,* **புலவர். திரு. இறைக்குருவனுக்கும்** *தி. பி. 2000. துலைத்திங்கள் முதல்நாள் (17-10-69) அன்றுகாலை கடலூரில் வாழ்க்கை ஒப்பந்தமும், மாலை திருமணப் பதிவும் நடைபெற்ற செய்தியையும், அதன் தொடர் பாகத் துலை-4-ஆம் பக்கல் [20-10—69] அன்று இரவு பாராட்டு நிகழ்ச்சி ஒன்று தென்மொழி அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியையும் மிக்க மகிழ்ச்சியுடன் அறிவித்துக்கொள்கின்றோம்.*

பாராட்டு விருந்தில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்திய அன்பர்க்கும், வரவியலாது வாழ்த்து விடுத்த தமிழன்பர்க்கும் எங்கள் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மொழிப் பேரறிஞர் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் *அவர்கள் விடுத்த வாழ்த்துப்பா வருமாறு:*

இறைக்குருவ பொற்கொடியர் இன்பத் தமிழின்
துறைக்கொருவ ராய்நீடு துய்க்க—நிறைத்திருவின்
"தென்மொழி" யோங்கத் திருவள் ளுவர்திகழும்
நன்மொழி காட்டி நடந்து.

இங்ஙன்,
பெருஞ்சித்திரன்.
தாமரை-பெருஞ்சித்திரன்.

தென்மொழி
கடலூர்-௧.

www.thamizham.net - Free E book No 7419

"தமிழின் பழைய வரிவடிவும் அதன் புதிய ஒலிவடிவும்"

[மறுப்புக் கட்டுரை]

-புலவர். அ. சுந்தரேசன்-

சீர்திருத்தம் எப்போது நிகழும்?: ஒன்றைச் சீர்திருத்துவது என்றால் அப்பொருளில் இருநிலைகளில் மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும். ஒன்று: இருந்தநிலையில் பழுது ஏற்பட்டிருக்க வேண்டும். மற்றொன்று: பழுதில்லை என்றாலும் அது குறைந்த விளைவை நல்குவதாயின், மேலும் அப்பொருளை நிறைந்த பயன் நல்குவதற்கேற்பப் புதுப்பிக்க வேண்டும். இவ்விருவகை நிலை ஏற்பட்டாலொழிய இருக்கும் பொருளைச் சீர்திருத்துவதற்கு வாய்ப்பே இல்லை.

முதல்நிலை: முதல் நிலையின்படி ஆய்ந்து பார்த்தால், தமிழ் மொழியில் ஏதேனும் பழுது ஏற்பட்டுள்ளதா எனின், ஒன்றுமில்லை என்பது வெள்ளிடைமலை. கட்டுரைப் பேராசிரியர் மு. உலகநாதனார் தமிழின்கண் பழுது ஏற்பட்டுள்ளதாகக் கூறவில்லை. அவர் சுட்டுகின்ற ஆசிரியர்களான புலவர். திரு. குழந்தை, திரு. குற்றாலம், திரு. தெ. பொ. மீ., திரு. ஞானசம்பந்தன் போன்றோரும் ஏதும் சுட்டி இருப்பதாக அறிதற்கு இடமில்லை. இந்நிலையில் சீர்திருத்தம் முதல் நிலையின்படி தேவையற்றதாகின்றது.

இரண்டாம்நிலை: சீர்திருத்தத்தின் இரண்டாம் நிலையாகக் குறிப்பிட்டுள்ள மிகுந்த பயனை நல்கவில்லை என்பதைஆய்தல் வேண்டும். அவ்வாறாயின் இன்னின்ன பயனைத் தமிழ் மிகுதியாக நல்கவில்லை என்ற பட்டியலை முதலில் வரையறுத்துக் கொள்ளவேண்டும். அப்படியே வரையறை செய்துகொண்டாலும் மேலும் புதிய எழுத்துகளைச் சேர்ப்பதா, அல்லது இருக்கின்ற எழுத்துகளையே குறைத்துப் புது எழுத்துகளைப் புகுத்துவதா என்று ஆய்வது வேண்டற்பாலதொன்றும். ஆயின் கட்டுரை ஆசிரியர், தமிழ்மொழி இன்னின்ன மிகு பயன் நல்கவில்லை என்று தம் கட்டுரையில் யாண்டும் குறிப்பிடவில்லை; இருப்பின் குறிப்பிடாமல் விடுவாரா என்பதனை ஐயத்திற்கிடமாகக் கொள்ளின், நம் செந்தமிழ் தரவேண்டிய பயனைக் குறையாமல் மேலும் நிறைவாக அளித்துக்கொண்டுதானுள்ளது என்பது அங்கைநெல்லியென விளங்குகின்றதன்றோ?

www.thamizham.net - Free E book No 7419

பொருளுடையான் குற்றம்: ஒரு பொருள் மிகுந்த பயனை நல்க வில்லை எனின் குற்றம் அப்பொருள்மேல் மட்டும் இருக்கும் என்று முடிவுகூறல் பொருந்தாது. பொருளுடையான் அப்பொருளின் பயனைப் பெருக்கி நன்கு பயன் படுத்திக்கொள்ளாத குற்றமும் உண்டன்றே? அப்படியாயின் பொருளுடையான் தன் உடல் உள்ளம் அறிவு ஆகியவற்றைப் பெருக்கி அதன்வழி அப்பொருளான் வரும் விளைவைப் பெருக்கவேண்டுமே யல்லாது, குற்றம் அப்பொருளிலேயே உண்டு என்று கூறி அதனுள் இருக்கும் பகுதிகளையே களைந்து புதியன புகுத்தல் எங்ஙன் பொருந்தும்? இவ்வாறு ஆய்ந்து நோக்கின் குற்றம் மொழியின் மீதன்று; அதை வழங்குபவனிடத்தில்தான் உள்ளது என்பது தெள்ளிதின் விளங்கும்.

பொருளுடையான் கடமை: எனவே, வளர்ந்து பெருகி வரும் மேலை அறிவியற் கூறுகளை எல்லாம் விரைந்து தமிழாக்கி நம் மொழியைச் செழிப்படையச் செய்யாமல் வாளாவிருந்துவிட்டு, மொழியின் அடித்தளமாய எழுத்துகளையே சீர்திருத்த வேண்டும் என்று தாளையும், மையையும், பெறற்கரிய தென்மொழியின் பக்கங்களையும் வீணடித்துக் கொண்டிருப்பது, மாடிவீட்டில் வாழ்பவன் தென்றல் தன்னுடலைத்தழுவ ஆண்டு வரவில்லை என்று அதற்கு வேண்டிய அறிவியல் வழிகளைச் செய்யாமல் வீட்டின் அடிக்கல்லைத் தோண்டித் தென்றலைப் பெறுவேன் என்று கூறும் கூற்றிற்கு ஒப்பாக உள்ளது!

புலவர். குழந்தை: திரு. புலவர் குழந்தையவர்கள் உயிர் எழுத்துகளைப் பத்தாகக் குறைத்து, மேலும் அவற்றுள் இறுதி எட்டெழுத்துகளின் வரிவடிவங்களை முற்றிலும் மாற்றியிருப்பது நகைப்பிற்கிடமாகவுள்ளது. தமிழினம் இப்பொழுதுதான் தோன்றியுள்ளது என்று நினைத்து, அவ்வினம் மொழியைப் பேச்சுவழக்கில் மட்டுந்தான் கொண்டுள்ளது; எழுத்து வழக்கில் இல்லை; எனவே எப்படியும் எழுத்து வழக்கு உண்டாக்க வேண்டும் என்று பெருமுயற்சிகொண்டு தோற்றுவித்திருப்பதுபோல் உள்ளது புலவரின் எழுத்துச் சீர்திருத்தம். அஃதை ஆய்கின்றபோது இப்படியும் செய்யலாமா? என்றே உள்ளம் நைகிறது. இதனால் தமிழ் நெடுங்கணக்கின் வரிவடிவு அழிந்து, அதனோடு அதன் ஒலி வடிவும் அழிந்து விடுமோ என்ற பேரச்சம் தமிழர் உளத்தில் எழுந்த வண்ணமுள்ளது; புலவர்க்கு இத்தகைய ஆராய்ச்சி எண்ணம் ஏனோ என்று எண்ணத் தோன்றுகிறது. "இராவண காவியத்தில்", ஈடிணையற்ற தமிழரின் எழுச்சியைக்

www.thamizham.net - Free E book No 7419

காட்டிய புலவர் குழந்தையவர்கள் "அரசியலரங்கில்" இறங்கிப் பாரதமாதாவைப் பாடியதேனோ என்று வருந்தியிருந்த உண்மைத் தமிழர் நெஞ்சம், அவரது "எழுத்துச் சீர்திருத்தம்". கண்டு அஞ்ச வேண்டியுள்ளது.

திரு. குற்றாலம்: "தமிழ் நெடுங்கணக்கில் உயிர்மெய் யெழுத்துகள் 216 ஆக மிகுந்துள்ளன: ஆங்கிலம் இருபத்தாறு எழுத்துகளால் உலகையே ஆள்கிறது; எனவே தமிழும் உயிரும் மெய்யுமாய முப்பதெழுத்துகளாலேயே இயங்கவேண்டும்", என்று தாம் எண்ணிய போக்கில் திரு. குற்றாலம் அவர்கள் தமது ஆராய்ச்சியை ஓட்டியுள்ளார். இவரது ஆராய்ச்சியில் இவர் ஆங்கிலத்தைப் பார்த்து அன்னைத் தமிழுக்கு எழுத்துகளைக் கணிப்பது, "பூனையைப் பார்த்துப் புலி தன்னுடைய எழில்மிகு இயற்கையான வரிவடிவங்களைக் குலைத்துக்கொண்டதற்கொப்பாக உள்ளது!

எழுத்துகள் குறைவாக இருப்பதால்தான் ஆங்கிலம் உலக மொழியாகப் பரவியுள்ளதா? உயிரும் மெய்யும் இருபத்தாறு எழுத்துகளால் ஆளப்படும் ஆங்கிலம் தனக்கென ஓர் உயிர்மெய் யெழுத்தும் இல்லாததால், அதன் எழுத்தும் ஒலியும் கற்பவரது உயிராற்றலை எவ்வாறு பெருமளவில் வீணுக்குகின்றன என்பதைத் திரு. குற்றாலம் அவர்கள் உணர்ந்து பார்க்கவில்லையா?

மிகவும் சிக்கலான கூட்டு எழுத்துகளை உடைய ஆங்கிலம் எழுத்துகளின் வழி ஒலியைப் பலுக்காமலும், ஒலியின் வழி எழுத்துகளை எழுதாமலும் கற்பவர்க்குப் பெருத்த இடர்ப்பாட்டினை விளைவிப்பதை நோக்க வேண்டாவா? சான்றாக Knife, laugh, Psychology, Knight, White ஆகிய ஆங்கிலச் சொற்கள் ஒலியின் வழி பலுக்கப்படுகின்றனவா? அல்லது எழுத்தின்வழி பலுக்கப்படுகின்றனவா? ஒலியின்வழி எனின் எழுத்துகளுக்குரிய தகுதி எங்கே? எழுத்தின் வழி எனின் பல எழுத்துகள் சொற்களில் பலுக்கப்படாமல் இருப்பதேனோ? இவற்றையெல்லாம் ஆய்ந்து நோக்கின் ஆங்கிலம் தனக்கென உயிர்மெய்யெழுத்துகளை இன்னும் உண்டாக்கிக் கொள்ளாத பெருங்குறையால்தான் அஃது இத்தகைய இடர்ப்பாட்டினை உடையதாயிருக்கின்றது என்பது விளங்குமன்றோ?

எனவே, ஆங்கிலத்தைப் பார்த்தா தமிழ் சீர்திருத்தம் அடைய வேண்டும்? அறிஞன் தன்னைவிட அறிஞனையே வழிகாட்டியாகக்

www.thamizham.net - Free E book No 7419

கொள்ளவேண்டுமே ஒழிய, தாழ்ந்தவனைப் பார்ப்பது தகுதியா? ஆங்கிலம் உலக மொழியாகவும், அறிவியல் மொழியாகவும் பெருகி இருப்பதற்குக் காரணியம், ஆங்கிலேயர் உலகாண்ட ஆட்சியின் திறத்தால் என்பதை மிகவும் எளிமையாகப் புரிந்து கொள்ளலாமே! இற்றை நாள் ஏதுமற்ற இழிமொழியாம் இந்தி, பொது மொழியாக, பல்லிளித்து நடிப்பது ஆட்சியின் திறத்தாலேயாமென்பதை யோர்க! ஆதலின் எழுத்திற்கும் ஒலிக்கும் மிகுந்த இடர்ப்பாட்டினை அளிக்கும் ஆங்கிலம்போல நந்தமிழும் இடர்ப்பட இடமளிக்கும் குற்றாலத்தின் எழுத்துச் சீர்திருத்தம் தேவையற்றதே யாம்.

திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம்: திரு. தெ. பொ. மீ. அவர்களின் எழுத்துச் சீர்திருத்தம் நமதருந்தமிழை ஆரியத்திற்கடிமையாக்கும் இயற்கையற்ற வலிந்த, மிகவும் கொடுமையான, நஞ்சு கலந்த முயற்சியாகும். அதை எண்ணிப் பார்க்கவே நெஞ்சம் துணுக் குறுகின்றது. இத்தகையவர்களின் நச்சு ஆராய்ச்சிக்கும் இடமளிக்கும் தமிழக மண்ணின் பொறுமையே பொறுமை! "வடமொழியின் ஓசை வரி,வடிவம் போலத் தமிழும் பெறலாம்", எனக் கூறும் அன்னாரின் ஆராய்ச்சி ஈண்டு இன்னும் உலவுகின்றதே என்பதை நோக்குகின்றபோது, தமிழன்னையை நோக்கி அழத்தான் தோன்றுகிறது! "என் ஆருயிர்த் தமிழன்னாய்! இத்தகைய நெருஞ்சிப்பழங்களா உனது பொன்னடிக்குப் பாயாக வேண்டும்", என்று வினவத் தோன்றுகிறது! தமிழர்கள் எவ்வாறு அயராது அல்லும் பகலும் விழிப்பாய் இருக்க வேண்டுமென்பதையே தெ. பொ. மீ. யின் ஆராய்ச்சி நமக்கு எஞ்ஞான்றும் நினைவூட்டுகின்றது.

திரு. ஞானசம்பந்தன்: இவர் புலவர். திரு. குழந்தையைப் போல, ஒருவகையில் அவரையும் விஞ்சியவராய், உயிர் பன்னிரண்டின் வடிவங்களை முற்றிலும் மாற்றியுள்ளார். இவர்களின் ஆராய்ச்சிகளை நோக்குகின்றபோது, ஏன்தான் தமிழின் அடிப்படையைத் தகர்க்க இப்படி வரிந்துகொண்டு முனைகின்றார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. இவர்களின் சீர்திருத்த ஆராய்ச்சியும் காலமும் வீண் என்பதை இவர்கள் தெற்றென உணர்தல் வேண்டும்.

திரு. மு. உலகநாதன்: புலவர் திரு. குழந்தை, திரு. குற்றாலம், திரு. தெ. பொ. மீ, திரு. ஞானசம்பந்தன் ஆகியோர்க்கெல்லாம் மாற்றுக் கூறிவிட்டுக் கட்டுரை வரையும் ஆசிரியர் திரு. மு. உலகநாதன் அவர்கள், தாமும் சீர்திருத்தம் வேண்டும் என வலிந்து கூறு

www.thamizham.net - Free E book No 7419

வது, "ஊருக்கெல்லாம் அறிவுரை சொன்ன பல்லி சாக்கடையில் விழுந்த கதை" போல் உள்ளது. சான்றாக:

"இன்றைய தமிழ் உயிர்வடிவில் ஈகார ஔை பெறுகின்ற எழுத்துகளெல்லாவற்றையும் உகரமென்னும் குறில் ஓசையாகமாற்றி, அதை நெடுமையாக்க அதன் பக்கலில் காலை (ா) இடவேண்டும்" என்று ஆசிரியர் கூறுவது வியப்பாக உள்ளது! அதன்படி

கி—கு—ஓசையைப் பெறுகிறது.

கீா—கூ—ஓசையைப் பெறுகிறது. என்னே, எழுத்துச் சீர் திருத்தம்!

காலிற்கே செருப்பு: மேற்காட்டிய ஆசிரியர்களின் எழுத்துச் சீர்திருத்தங்களால் தமிழ் மொழிக்குப் பல்லாற்றானும் அழிவே நேரும் என்பது வெளிப்படை. தட்டெழுத்துப் பொறிக்கும், அச்சுக்கும் சற்றே எளிமை ஏற்படுகிறது என்பதற்காகத் தமிழின் இயற்கையோடு இயந்த வரிவடிவைக் குறைப்பது செருப்பின் வடிவிற்கேற்பக் காலைக் குறைக்கின்ற செயலுக் கொப்பாக இருக்கின்றது என்பதைக்கட்டுரையாசிரியர் அருள்கூர்ந்து ஆய்ந்து நோக்கவேண்டும்.

புகுதலும் புகுத்தலும்: மொழியைப் பொறுத்தவரை

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே" என்று வரையறுத்த பவ்வணந்தியின் கூற்றைக் கட்டுரையாசிரியர் ஆய்ந்து நோக்கல் வேண்டும். புதுமையும் சீர்திருத்தமும் மொழியில் இயற்கையாகப் புக வேண்டுமே யொழிய இயற்கைக்கு மாறாய் வலிந்து புகுத்தப்படக் கூடாது; அதேபோன்று பழையன கழிதல் வேண்டுமேயன்றிக் கழிக்கப்படக் கூடாது!

புகுதல்வேறு—புகுத்தல்வேறு
கழிதல்வேறு—கழித்தல்வேறு-எனவே அவ்வக்காலத்தில் வாழ்கின்ற மக்களின் சூழலுக்கேற்ப அவர்களறியாமலேயே எழுத்தின் வரிவடிவு மாறும் என்பதை, தொல்காப்பியர் கால வரிவடிவத்திற்கும், நம் கால வரிவடிவத்திற்கும் இருக்கும் வேறுபாட்டைக் கொண்டே நன்கு அறியலாம்.

மாற்றம்:

மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்: தொல் 105. என்ற தொல்காப்பியர்,

www.thamizham.net - Free E book No 7419

"குற்றியலுகரமும் அற்றெனமொழிப" தொல். 106. என்ற நூற்பாவால் குற்றியலுகரத்திற்கு வரையறுத்த வரிவடிவு இன்றும் அப்படியே உள்ளதா?

"உட்பெறுபுள்ளி உருவாகும்மே' தொல்: 4, என்று மகரத்திற்கு வரிவடிவு வகுத்த தொல்காப்பியரின் வரையறை இன்றும் நிலவுகிறதா?

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்"— தொல். 15 என்று மெய்யெழுத்தின் இயல்பை வரையறுத்ததோடு,

எகர ஒகரத்தியற்கையும் அற்றே"—தொல். 16.- என்ற எகர ஒகரத்தின் வடிவு நிலைத்துள்ளதா? இவ்வரிவடிவங்களை மாற்றியது யார்? மாற்றவேண்டுமென்று யாரேனும் மாற்றினார்களா? இயற்கை. யாகவன்றோ மாற்றம் நிகழ்ந்துள்ளது? இம்மாற்றங்களை மக்கள் உணராமலன்றோ இன்றும் இயல்பாக இருப்பதைப்போல எண்ணி எழுதுகின்றனர்!

உணவும் உண்மையும்:

உணவின் சுவையை வாய் தன்னைவிட்டு அவ்வுணவு செல்லும் வரைதான் உணரமுடியும். வாயைவிட்டுச் சென்ற உணவு, பின்னர் என்ன மாற்றங்களை அடைந்தது என்று வாயோ, அதை உடைய வரோ அறியாதவாறு பலமாற்றங்களைப் பெற்று உடலுக்கு வளமையைச் சேர்க்கிறது. வாயைவிட்டுச் சென்ற உணவின் மாற்றத்தைப் போல எழுத்துகளின் வரிவடிவு மாற்றம் பெறவேண்டும் என்பதைத் தொல்காப்பியரின் வரிவடிவத்திற்கும், இக்கால வரிவடிவத்திற்கும் இருக்கும் மாறுபாடே உணர்த்தும். அவ்வக்காலத்திருக்கும் வரிவடிவங்களை மக்கள் பயன்படுத்திக்கொள்வது உணவு வாயில் இருக்கும் வரை அதன் சுவையை வாய் உணர்வதைப் போன்றதாகும்.

முடிவுரை: மாற்றம் இயல்பாய், இயற்கையாய் வேண்டும் என்பது இன்றியமையாததாகும். ஆதலின் எழுத்துச் சீர்திருத்தம் என்பது தேவையற்றது என அறுதியிட்டுக் கூறி இம்மறுப்புக் கட்டுரையை முடிக்கின்றேன். 0

www.thamizham.net - Free E book No 7419

வித்தும் விளைவும்

-துரை-மாணிக்கம்.

தென்மொழிக்கே மூச்சுயிர்த்து விடுதலைக்கே வாழும்
தீதறியா என்னுளத்தைக் கேள்வியொன்று கேட்டேன்:
"புன்மொழிகள் தாங்கினைநீ; பழிபலவும் ஏற்றாய்;
புதுநினைவுக் கிடமின்றி ஒருநினைவால் வாழ்ந்தாய்;
வன்மொழிக்கும் சோர்கிலைநீ; வஞ்சருக்கும் அஞ்சாய்!
வாழ்க்கையெனும் தனிநிலைக்கும் பொதுமையுரை சொன்னாய்;
இன்மொழிக்கும் மயங்கிலைநீ; ஏற்றம்பல தோற்றாய்;
ஏசலுக்கும் கூசிலைநீ!—என்னபயன் கண்டாய்?"

"—கதிர்தோன்றி விழும்வரைக்கும் காட்சி,உரை யாவும்
கையசைத்துச் செய்துவரும் பல்வினையும் போக்கும்
எதிர்தோன்றி எவர்தடுத்துக் கூறினும்சா யாமல்
"எந்தமிழ்க்கே எந்தமிழர் நாட்டினுக்கே" என்னும்
புதிர்தோன்றும் வாழ்க்கைக்கே பொழுதமைத்துக் கொண்டாய்;
போக்கிலெள்ளின் மூக்களவும் மாற்றமிலை என்றாய்;
கதிர்தோன்றும் எனும்நினைவில் காணிபல வித்திக்
காத்திருந்தாய்; காத்திருந்தாய்-என்னபயன் கண்டாய்?"

"—மாறிவரும் வாழ்க்கையிலே மனமழிப்பார் கோடி;
மயக்கிவரும் உலகியலில் வயப்படுவார் கோடி;
ஊறிவரும் நலங்களிலே உளம்புதைப்பார் கோடி;
உவப்பளிக்கும் வருவாய்க்குத் தவங்கிடப்பார் கோடி;
ஏறிவரும் இல்லறத்தில் இலக்கிழப்பார் கோடி;
இழுத்தலைக்கும் பணங்காசில் வழுக்கிடுவார் கோடி;
கூறிவரும் கொள்கையிலோர் அணுவுங்குறை யாமல்
கூறுகின்றாய்; கூறுகின்றாய்—என்னபயன் கண்டாய்?"

"—முட்டுகின்ற வறுமையினுள் மூழ்கியழி யாமல்
முகமாறிப் பேசுகின்ற அன்பர்பலர் கண்டாய்!
விட்டகன்ற அன்பர்பலர் உலைவிழ்த்தும் போக்கில்
வீசுகின்ற பொய்யுரைக்கும் விழவில்லை நின்தோள்;
கட்டுகின்ற நல்லமைப்பும் சிதைகின்ற தவறால்;
காட்டுகின்ற பாதையிலோ கல்பரப்பி வைப்பார்;
எட்டுகின்ற கொள்கைக்கோ எழுநூறு தடைகள்;
எழுதுகின்றாய்; எழுதுகின்றாய்—என்னபயன் கண்டாய்?"

www.thamizham.net - Free E book No 7419

உள்ளமெனும் வழிகாட்டி தனைநோக்கிக் கேட்டேன்;
ஒருநூறு முறைகேட்டேன்; விடைகேட்க நின்றேன்;
வெள்ளமெனும் பேருணர்வில் எனைவிழுத்தி வாழ்வை
விணடிக்கும் வல்லவனைச் சலிப்புமிகக் கேட்டேன்.
பள்ளமிது; மேடிதென்று பகுத்துணரார் பாங்கில்
பாக்கள்பல வித்திவிட்ட சோர்வதனால் கேட்டேன்.
கொள்ளையுணர் வெழுந்ததுபோல், கொழுந்துவிட்ட தீப்போல்
கூர்த்தெழுந்தே ஆர்த்ததுள்ளம்! இடிமுழக்கம் கேட்பீர்:

''மூளுகின்ற பேரறிவில் பிள்ளையடா நீதான்;
முங்கிவரும் வல்லுணர்வில் சிறுதுகள்நீ; புடவி
நீளுகின்ற ஊழியிலே சிறுபொழுதுன் ஆட்சி!
நினைவென்னும் விரிவானத் தொருசிறுகூ றும்,நீ!
ஆளுகின்ற நிறைத்திருவின் இறைப்பெரும்பே ராற்றல்
ஆட்டிவைக்கும் மேடையில்நீ ஆடுகின்ற சிறுவன்;
மாளுகின்ற வாழ்க்கையிலே மனம்வைத்துக் கேட்டாய்!
மட்கிவிடும் நீயெனது மாண்பினை ஐ யுற்றாய்!

வித்தழிந்து செடியாகும்; செடியழிந்து மரமாம்;
விரிந்தலரும் பூவழிந்து காயழிந்து கனியாம்;
ஒத்தழிந்த கனிகளுக்குள் ஒருகோடித் தோற்றம்;
உருவழியும் நிலையினுக்கேன் உளமழிய நொந்தாய்!
பித்தழிந்த பின்னையன்றோ மெய்ப்பொருளுங் காண்பாய்!
பேச்சழிந்து போனதற்கா மூச்சழித்துக் கொண்டாய்!
செத்தழிந்து போவதெது? சிறப்பதெதென் றந்தச்
சீரறிந்து கொண்டவன்போல் நீபிதற்று கின்றாய்!

கோடிபுலம்; கோடிநிலம்; விளைவுபல கோடி;
கூர்தலெவை; ஆர்தலெவை; தீர்தலெவை என்று
தேடிநலங் கண்டதுபோல் தீர்ந்தவுரை செய்வாய்!
திகைப்படைவாய்; உலகியற்குத் தேய்ந்திடிந்து போனாய்;
நாடிநிலங் கண்டவிடத் துழுதுவிதை யூன்றல்
நானுனக்குத் தந்தவினை; விளைவுபயன் முற்றும்
கூடிநலங் கூட்டுவதும் குறைப்பதுவும் நீயோ?
குறைமதிக்குங் கீழ்மதியால் குழம்புவதும் ஏனோ?

நின்னுடலம் வளர்ச்சியுற உணவருந்தும் நின்வாய்
நிகழ்த்துவினை மென்றுணவை விழுங்குநிலை ஒன்றே!
உன்னுடலுள் சென்றவுண வுட்கலந்த சாற்றை
உறிஞ்சுவதும் செந்நீராய் மாற்றுவதும் யார்கொல்?

www.thamizham.net - Free E book No 7419

தின்னுணவைத் தேடியிடுங் கையோநின் வாயோ?
  திகைப்படைந்தால் உணவுநிலை பயன்மாறிப் போமோ?
என்னுணர்வாய் நீயிலங்க வேண்டுமெனக் காண்பாய்!
  எதிர்விளைவைக் கண்டெதற்கேன் நீதயங்கல் வேண்டும்?

வித்திடுக; வித்திடுக, வித்திடுக! தன்னால்
  விளைந்துவரும்; விளைந்துவரும்; விளைந்துவரும் ஆக்கம்!
எத்திசையில் எத்தரையில் எத்துறையில் நின்றால்
  இயன்றிடுமோ அவ்வகையில் முயலுகநீ நன்றே!
வித்தியதன் விளைவெண்ணிக் கவன்றிடுதல் வேண்டா;
  விளைவுசிறி தாமெனிலோ பயனுடனே தோன்றும்!
முத்துவிளை காலமென்ன, கரிவயிர மாகும்
  முழுக்காலம் என்னவென நீயறிய மாட்டாய்!

மரமழிந்து நிலம்புதைந்து பழுத்தணுக்கள் கரியாய்
  மாறவிரு பத்திலக்கம் ஆண்டுசெலல் வேண்டும்!
  மிகுந்து கருமையுற்று நிலக்கரியாய் மாறி
  உருப்பெறவோ மேலுமிரு பத்திலக்கம் ஆண்டு!
கரிவயிர மாகவிரு பத்திலக்கம் மேலும்
  கழிந்திடுதல் வேண்டுமதைக் கனியியலார் அறிவார்!
கரிமாறிக் காழகமாய் மாறுதற்கே ஊழி
  காத்திருக்க வேண்டுமெனில் உள்ளமென்ன கரியா?

சிறையார்ந்து புடைபரந்து விரிந்திடுவான் வெளியில்
  சிறுத்தவொரு கதிரவனின் தெறித்தபொறி உலகம்
துறையார்ந்து கிடக்கின்ற சிறுமணல்போல்! அந்தத்
  துணுக்குலகின் அணுக்களுளே துண்ணணுவும் நீதான்!
குறையார்ந்த சிறுமாந்தத் துகளே! நீ சொல்வாய்!
  "கொத்திவிதை யிட்டவுடன் பயனிலைகாண்" என்பாய்!
மறையார்ந்த தோற்றமதும் முடிவதுவும் கண்டார்
  மாந்தருக்குள் ஒருவருண்டோ? மற்றுனக்கேன் கவலை?

இயற்கையெனும் பெருவினைஞன் இட்டவொரு தீர்ப்பில்
  எழுந்தனைநீ; எழுந்ததுளம்; எழுந்ததுணர் வுன்னுள்!
மயற்கையிலா துணர்ந்தவை,நீ மற்றவர்க்கும் உரைப்பாய்!
  மற்றவற்றால் விளைவதெல்லாம் உலகமன்றோ துய்க்கும்!
செயற்கையன்றோ நின்கடமை! விளைவவனுக் கன்றோ!
  செயலுக்கொரு கருவியன்றோ நின்னுருவும் அறிவும்!
முயற்கையால் முழுநிலமும் அளந்துமுழங் காண
  முயல்வதுகாண் நீவிளைவை அளந்திடுமெந் நோக்கம்!

www.thamizham.net - Free E book No 7419

பாவெழுத உணர்வமைத்தேன்; பாடலுன்றன் செய்கை!
படித்துணர அறிவமைத்தேன்; படிப்பதுநின் கடமை!
நாவெழுதும் உரையமைத்தேன்; நாற்புறமுஞ் சென்று
நாட்டுநலம் மக்கள்நலம் அறிவுநலம் பற்றி
யாவருக்கும் உரைதரவுங் கட்டளைநான் இட்டேன்!
யாதுவிளை வென்றறிதல் நின்மிகுந்த செய்கை!
பூவிருக்கும் நிலையினிலே கனியறிதல் உண்டோ?
பூமணமும் வேறதனின் கனிச்சுவையும் வேறாம்!

என்னருமைச் சிறுசுடரே! திருவுடலே! செயலே!
எவ்விளைவும் கருதற்க! செய்கவுன்றன் வினையே!
நின்னருமைச் சிறுவினையால் விளைவுபல வாகும்!
நின்விளைவை நீயறிதல் நீளுலகில் இல்லை!
பொன்னருமை பொன்னறிவ தில்லையன்றோ? வாழ்வுப்
பொழுதெல்லாம் நின்னுணர்வால் பொழிந்திடுக! என்றும்
நின்னிலையில் தாழற்க! கவலற்க! உலகில்
நிகழ்த்தவெண்ணும் பலவிளைவுள் நின்விளைவும் ஒன்றே!

தூய்மையுளம்; தூய்மையுரை; தூய்மைவினை; என்றும்
துவள்தலிலா ஒருநிலைக்கே நினையிருத்திக் கொண்டால்
வாய்மைநிலை வாய்ப்பதல்லால் வேறுநிலை யில்லை;
வறுமைநிலை என்பவெல்லாம் வெறுமைநிலை யாகா!
தேய்தல்நிலை யில்லை; உளம் தீங்குறுதல் இல்லை;
தெருள்நிலையும் தோன்றிவரும் மருள்நிலைமாய்ந் தக்கால்!
ஓய்தல்நிலை யற்றொருகால் சாய்தல்நிலை யில்லா
துழைத்திடுக; உழைத்திடுக; விளைவுபல கோடி!"—

உள்ளமெனும் அன்னையெனக் குரைத்தவிடை யிஃதாம்!
உற்றவிடை கேட்டதன்பின் உடல்முழுதும் காந்த
வெள்ளமெனும் பேருணர்வால் சிலிர்சிலிர்க்க நின்றேன்!
விளக்கமிலாப் பலநிலைகள் விளங்கிடவும் கண்டேன்!
விள்ளரிய பெருமுழக்கம் என்னுளத்துள் கேட்டேன்!
வியனுலகப் பொருளனைத்தும் ஒன்றெனவு ணர்ந்தேன்.
எள்ளவொரு பொருளுமிலை; வாழ்த்தவொன்று மில்லை!
எண்ணவொரு நினைவுமிலை! மறக்கவொன்று மில்லை!

-0-

www.thamizham.net - Free E book No 7419

தனித்தமிழ்ச் செய்தித்தாள் திட்டம்

அறிக்கை – I

மக்களிடையில் ஒரு கருத்தையோ கொள்கையையோ விரைந்து பரப்புதற்குச் செய்தித்தாளைத் தவிரச் சிறந்த கருவி வேறொன்றுமில்லை. பண்டைக்காலத்தே ஆரியப் பார்ப்பனர் தம் ஏமாற்றுக் கொள்கைகளைப் 'புராண' 'இதிகாச'ங்களின் வழியே பரப்பியது போன்றே, பிற்காலத்தே அவர் தம் பொய் புரட்டுகளுக்குத் துணை புரிந்தவை செய்தித்தாள்களும் வானொலியும், பிற அரசியல் அதிகாரப் பதவிகளுமே. இவ்வழியே அவர்கள் பரப்பிவரும் பொய்ம்மையும் போலிமையும் நிறைந்த கருத்துகளை முறியடிக்கும் வகையில் நாம் இன்னும் வலுப்பெற்றோமில்லை. நாளொன்றிற்கு இலக்கக் கணக்காக அடித்து நம் கருத்துகளை வெளிப்படுத்தும் பெரிய நாளிதழ்கள் தன்மானத் தமிழரிடையில் ஒன்றுகூட இல்லை. **'தினத்தந்தி'** போன்ற தமிழர் நடத்தும் நாளிதழ்கள் ஓரளவு மிகுந்த எண்ணிக்கையில் விற்பனையாகின்றனவேனும், அவற்றால் தமிழர் அடைந்து வரும் பயனைவிட, கேடுகளே மிகுதி என்று நடுநிலைத் தன்மானத் தமிழர் யாவரும் உணர்வர். வானொலித் துறையை எடுத்துக்கொண்டாலோ, தில்லி முதல் திருநெல்வேலி ஈறாக ஆரியப் பார்ப்பனரின் கையோச்சுதலே மிகுதி. நாமெல்லாம் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகும் அளவிற்கு அவ்வாரியப் பார்ப்பனர்களும் பார்ப்பனத்திகளும் அவர்தம் குஞ்சு குளுவான்களும் செய்யும் கூத்துகளும், கொட்டமடிப்புகளும், அக்கிராகரப் பேச்சு நடைகளும் மிகுதி; மிகுதி; மிகுதி! தப்பித்தவறி வானொலி நிலையங்களில் பணிபுரிந்துவரும் நம்மனோரில் பெரும்பாலோரும் தொடைநடுங்கிகளாகவும், தோள் சூம்பிகளாகவும், துணிவான ஒரு சொல்லையும் வெளிப்படுத்த வியலாத கோழைகளாகவுமே இருப்பதை நாம் கண் வருந்தக்கண்டு உளம் வருந்தப் புண்படவேண்டியுள்ளது, சிற்சில நேரங்களில் அவர்களில் சிலர்வழி நமக்குக் கிடைத்துவரும் வாய்ப்பையும் நாம் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வியலாதபடி அவர்களே நம் முதுகைக் கூனவும், நம் தோளைத் தாழ்த்தவும் நம் குரல்வளையை நெறிக்கவும் செய்து விடுகின்றனர். கேட்டால், படிப்படியாகத்தான் நாம் பார்ப்பனரின் கைவரிசைகளை முறியடிக்க வேண்டும் என்கின்றனர். படிப்படியாக இவர்கள்வழி நாம் அளந்து முடிவதற்குள், பார்ப்பான் மூட்டை மூட்டையாக அடித்துக் கொண்டு போய்விடுவான் என்பதை இவர்கள் எந்த வகையில் சொன்னாலும் நம்புவதில்லை. புரிந்துகொள்ள விரும்புவதுமில்லை. அரசியல் அதிகாரப் பதவிகளில் உள்ளவர்களைப்பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. எனவே அங்கிங்கெனாதபடி எங்கும் புகுந்து, நீக்கமற நிறைந்து தாம் ஆக்கமுற வாழ்ந்துவரும் ஆரியப் பார்ப்பனியத்தை

www.thamizham.net - Free E book No 7419

நாம் வேருடன் சிதைக்கவேண்டுமானால், பெரியாரையும் அவர் விடுதலையையும்மட்டும் நம்பிக்கொண்டிருந்தால் பயனில்லை. விடுதலை படிப்பவர் பத்தாயிரத்துக்கு ஒருவர்கூட இல்லை. மேலும் விடுதலையும் பெரியாரும் ஆரியத்திற்கு வாளே தவிர, தமிழுக்குக் கேடயம் ஆகார். எனவே மொழியாலும், இனத்தாலும், கருத்தாலும் ஆரியரையும், அரசியல் பொருளியலால் வடவரையும் முறியடிக்கவும் நம் தன்மானக் குரலை எழுப்பவும், நாம் வல்லடிமைத் தனத்தினின்று மீளவும், தனித் தமிழ்க் கொள்கை யடிப்படையில் செப்பமும் ஒழுங்கும் நிறைந்த செய்தித்தாள் ஒன்றினை நாம் தொடங்கியாகவேண்டும்.

செய்தித்தாள் தொடங்குவது அவ்வளவு எளிதன்று. உடானை கட்டிப் போரடிப்பதான ஒரு செயல் அது. தாளிகையுலகில் கடந்த பதினைந்தாண்டுகளாக நான்-தனிப்பட்ட நான், தொட்டறிந்த வினையறிவும், பட்டறிந்த கருவியறிவும், கெட்டறிந்த துணையறிவுமே என்னை அச்சுறுத்தும்படியான ஒரு திட்டம் இச் செய்தித்தாள் திட்டம். இவ்வகையில் எனக்கு உண்மையை உணர்த்திய குறள்கள் மூன்று. அவை இவை:

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை,

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்.

நன்றாற்ற லுள்ளும் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

எப்படியாவது ஒரு திட்டத்தை வெளிப்படுத்தி விட்டால் அஃது எக்கேடோ கெட்டுவிட்டுப் போகின்றது-என்றெண்ணுபவனல்லன் நான். எண்ணித் துணியவேண்டும் என்பதும், துணிந்தபின் எண்ணுவது (மடமையோ, கேடோ அன்று) இழுக்கு என்பதும் எனக்குத் தெரியும். "கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை; இடைக்கொட்கின் எற்றா விழுமந் தரும்"—என்பதை நான் கடைப்பிடிக்கப் பழகிக் கொண்டவன். செய்தித்தாள் துறையில் உள்ள இழிவுகளையும் சிறப்புகளையும் ஓரளவு உணர்ந்தவன். அங்கு நடக்கும் புரைகளையும் பூசல்களையும் கண்டு முகஞ்சுளித்தவன். அத்துறையினையும் மாற்றியமைத்தாக வேண்டும் என்று உறுதி பூண்டவன். இவற்றின் அடிப்படையிலேயே எனக்கென்று நானே ஒரு தகுதியை ஏற்படுத்திக் கொண்டு இத்திட்டத்தை-நடந்தாக வேண்டிய இவ்வாக்க வேலையை உங்கள்முன் அறிமுகப்படுத்துகின்றேன். தன்மானமும் தமிழ், தமிழர், தமிழகம் பற்றிய அக்கறையும் கொண்டவர்கள் மேலே படிக்கலாம்; படித்துத் தமக்கு அவற்றின் மேல் உள்ள உறுதியை நிலைநாட்டிக் கொள்ளலாம். அப்படியில்லாதவர்கள் இத்துடன் நிறுத்திக் கொள்ளலாம்.

www.thamizham.net - Free E book No 7419

இத்திட்டத்தின் அடிப்படைக் கூறுபாடுகள்:

1. இத்திட்டத்திற்கும் தென்மொழிக்கும் எந்தத் தொடர்பு மில்லை.

2. இத்திட்டம் முழுவதும் தனித்தமிழ்க் கொள்கைகளைச் செயற் படுத்தும் திட்டமே.

3. தென்மொழியால் நிறைவு செய்ய வியலாத பொதுத்துறை கள், பொதுமக்கள் தொடர்பு, கலையாக்கங்கள், நாட்டு நடப்புகள், பொழுதுபோக்குகள் முதலிய அனைத்தும் இத்திட்டத்தால் நிறைவு செய்யப்பெறும்.

4. தனித்தமிழ் இயக்கத்தினர்க்கும், உலகத் தமிழ்க் கழகத்தி னர்க்கும் ஊக்கமூட்டும் வகையிலும், பிற பத்தாம்பசலிக் கொள்கை யினர் யாவரும் அஞ்சிப் புறம்போகும் வகையிலும் அமைக்கப்பெறும் இத்திட்டம் பின் முறையாக உலக முழுமையும் விரிவாக்கப்பெறும்.

5. வெறும் பேச்சளவில் நில்லாது வினையளவில் நம் கொள் கைகள் அனைத்தும் நிறைவேற இத்திட்டம் இன்றியமையாத ஒரு செயல் திட்டமாகக் கொள்ளப்பெற்றுக் கூட்டுறவு முறையில் இஃது இயக்கப்பெறும்.

இத்திட்டத்தின் செயல்முறைகள்:

1. பங்கு ஒன்று நூறு உருபாயாகக்குறைந்தது ஆயிரம் பங்கு களும்முடிந்தால் அதற்குமேலுமாகச்சேர்க்கப்பெறும்தொகையும் பங்கு ஒன்று ஐந்நூறு உருபாயாகக் குறைந்தது இருபதும் மிகுந்தது ஐம் பது மாகச்சேர்க்கப்பெறும்தொகையும், பங்கு ஒன்று ஆயிரம் உருபா யாகக் குறைந்தது பத்தும் மிகுந்தது இருபதுமாகச் சேர்க்கப்பெறும் தொகையும் இத்திட்டத்தின் முதலீட்டுத் தொகையாகும்.

2. குறிக்கப்பெற்ற குறைந்த பங்குகள் சேர்ந்தாலன்றி இத் திட்டம் நிறைவேற்றப்படமாட்டாது.

3. பங்கினர் அனைவரும் திட்டத்தின் பொது உறுப்பினர்களா கவும், நூறு உருபாப் பங்கினரில் நூற்றுள் ஒருவரும் ஐந்நூறு உரு பாப் பங்கினரில் பத்துள் ஒருவரும், ஆயிர உருபாப் பங்கினரில் ஐந்துள் ஒருவரும் செய்தித்தாள் செயற்குழு உறுப்பினர்களாக ஒப்போலைவழித் தேர்ந்தெடுக்கப் பெறுவர். செயற்குழு உறுப்பின ருள் பத்தில் ஒரு பங்கினர் ஆசிரியர்குழு உறுப்பினர் ஆவர். ஆசிரி யர்குழு உறுப்பினர் சேர்ந்து தம்முள் ஒருவரையோ, தாம் விரும்பும் உறுப்பினரல்லாத பிறரையோ தம்முள் பெரும்பான்மையோரின் விருப்பின்படி பொறுப்பாசிரியராக அமைத்துக் கொள்ளல் வேண்டும். உறுப்பினர் அல்லாத ஒருவர் ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பெறின் அவர் உறுப்பினர் ஆகிவிடுதல் வேண்டும். இவ்வமைப்பு குறித்த பிற நடைமுறைச் சட்டதிட்டங்கள் யாவும் இத்திட்டப்படி நடக்கும் முதல் செயற்குழுக் கூட்டத்தில் வரையறுக்கப்பெறும். செய்தித் தாளுக்கான பெயரும் பிற ஆக்கங்குறித்த செயல்களும் அச்செயற் கூட்டத்திலேயே வரையறுக்கப்பெறும்.

www.thamizham.net - Free E book No 7419

4. பங்குத் தொகைகளை எவரும் முன்கூட்டியே விடுத்தலும் தண்டுதலும் கூடாது. பங்குத் தொகைகள் யாவும் முழுமையாக, பங்காளரின் முதல் செயற்குழுக் கூட்டத்தின் தொடக்கத்தில் கட்டப் பெறுதல் வேண்டும். இத்திட்டத்தில் முத்துறை உறுப்பினருள் ஒருவராகச் சேர விரும்புவோர் கீழ்க்காணும் உறுதிமொழியை இத்திட்ட அமைப்பாளரின் கைக்குப் பதிவுமடல் வழி 1969 திசம்பர் 31-ஆம் பக்கலுக்குள் கிடைக்குமாறு அறிவித்திடல் வேண்டும். அதற்குப்பின் வரும் உறுதிமொழிகளை இத்திட்டத்தில் சேர்த்தல் இயலாது.

5. உறுதிமொழி: தென்மொழி இதழில் அண்மையில் வெளிவந்த "தனித்தமிழ்ச் செய்தித்தாள் திட்டத்தில்" என்னையும் ஓர் உறுப்பினனாகவும் 100/ 500/ 1000 உருபாப் பங்காளனாகவும் பதிவு செய்யக் கேட்டுக்கொள்ளுகின்றேன். பங்குத்தொகை முழுமையையும் இத்திட்டத்தின் வழிநடக்கும் பங்காளரின் முதல் செயற்குழுக் கூட்டத்தின் தொடக்கத்தில் கட்டிவிடுவேன் என்று உறுதியளிக்கின்றேன். என்னை இன்றிலிருந்து பங்காளருள் ஒருவனாகவே கருதிக் கொண்டு, எல்லா நடைமுறைகளையும் எனக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். எதிர்பாரா வகையில் நான் பங்குத்தொகையைக் கட்டத் தவறிவிடுவேனாயின் என்றால் அதுவரை தங்கட்கு ஏற்பட்ட தொல்லைகளையும், பிற செலவுகளையும் ஈடுகட்டும் வகையில் திட்ட முதற்செயற்குழு தீர்மானிக்கும் தண்டத்தொகையை நான் தங்களிடம் செலுத்திவிட உறுதியளிக்கிறேன்.

இங்ஙன்,

(முழு முகவரி) (கையொப்பம்)

(நாள்)

6. திட்டமும், திட்டத்தின்வழி நடைபெறவிருக்கும் செய்தித்தாளும், அதன் இயக்க முறைகளும், அவற்றைச்சாரும் உடைமைகளும் பிறவும் அரசினர் கூட்டுறவுச் சட்டதிட்டங்களின் அடிப்படையிலேயே நடைபெறும்.

7. இத் திட்டத்தின் பிற விளக்கங்கள் அவ்வப்பொழுது தென்மொழியில் அறிவிக்கப்பெறும். முதல் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு பதிவஞ்சல்வழி எல்லா உறுப்பினர்க்கும் தெரிவிக்கப்பெறும். எனவே, உறுப்பினர்கள் அனைவரும் தம்தம் உறுதிமொழியுடன் ஒவ்வோர் உருபா அஞ்சல் தலையையும், எல்லைக்கடவு(Pass Port) அளவில் தம் உருவப்படங்கள் (Photo) இரண்டினையும் கட்டாயம் விடுத்து வைத்தல் வேண்டும். அஞ்சல் தலையும் உருவப்படங்களுமின்றி வரும் உறுதிமொழிகளைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுதல் இயலாது. பிற பின்னர்.

மே/பா, தென்மொழி
கடலூர்-௧
கன்னி கரு. 1-10-1969

பெருஞ்சித்திரன்,
அமைப்பாளர்,
தனித்தமிழ்ச் செய்தித்தாள் திட்டம்.

www.thamizham.net - Free E book No 7419

இன்பமும் துன்பமும் (உளவியல்)

புலவர். திருமேனி. நாகராசன், காரைக்கால்.

கரணியங்கள்: பொதுவகையான் இன்ப துன்பங்களுக்கு அடிப்படைக் கரணியங்கள் மூன்றே யாம். அவை புலனுணர்ச்சி, தூண்டல். ஆர்வம் என்பன. (க) புலனுணர்ச்சி: புலன்கள் ஐந்தென் பது வெளிப்படை; ஆதலின் புலனுணர்ச்சியும் ஐந்தாதல் பெறப்படும். அவை ஊறும். ஒளியும், நாற்றமும், சுவையும், ஓசையுமாம். அவை அளவாய் அமையின் மாந்தர்க்கு இன்பம் உண்டாம்; மிகின் துன் பம் உண்டாம். (உ) தூண்டல்: தூண்டலைப் பொறுத்தும் இன்ப துன்பங்கள் அமைகின்றன. அளவான தூண்டல் இன்பம் அளிக் கிறது; மிகையான தூண்டல் துன்பம் உறுத்துகிறது. குழலோசை கேட்டுச் செவி களிக்கிறது; இஃது அளவான தூண்டல். குன்றுபட இடிக்கும் இடியேற்றின் பேரொலி கேட்டுச் செவி இன்னலுறுகிறது; இது மிகையான தூண்டல். பிறவும் அன்ன. (ங) ஆர்வம்: ஆர்வத் தைத் தூண்டும் அனைத்தும் இன்பம் தருகின்றன; ஆர்வத்தைத் தூண்டாதவை துன்பம் கொடுக்கின்றன. ஆர்வமும், ஆர்வமின்மை யும் முறையே இன்பதுன்பங்கட்கு அடிப்படைக் கரணியங்கள் ஆகும்.

இன்ப துன்ப வகைகள்: இன்ப துன்பங்கள் நான்கு வகைப் படும். அவை: புறஇன்பம், புறத்துன்பம்; அக இன்பம், அகத்துன் பம் என்பன. அகம் புறம் என்று இரண்டு பகுப்பு உண்டாதலின் இன்ப துன்பங்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டென நான்காயின. எனவே, புறத்தின்வழி இன்ப துன்பமும், அகத்தின்வழி இன்ப துன் பமும் பெறமுடிகிறது என்பர் ஒருசார் உளவியலார். இனிப் பிறி தொரு சாரார் புறஇன்பமும் அக இன்பமும் உள்ளத்திற்கே நலம் பயக்கின்றன; அதுபோன்றே புறத்துன்பமும், அகத்துன்பமும் அவ் வுள்ளத்திற்கே நலமின்மை தருகின்றன; ஆதலின் உள்ளமே நலமும், நலமின்மையும் பெறுகிறது; அஃதாவது உள்ளமே இன்பமும் துன் பம் அடைகிறது; புறம் அன்று என்பர். இவர்களின் கொள்கைப்படி அகத் துன்பம், அகஇன்பம் என்னும் இரண்டு மட்டுமே கொள்ளப் படுகின்றன.

இன்ப துன்பங்களின் ஆற்றல்: இன்ப துன்பங்களின் ஆற்றல் அளவிடற்கு அரியதாகும். "துன்பப்பட்டால்தான் வாழ்க்கையைக் கற்றுக்கொள்ள முடியும்" என்கிறார் ஒரு பிரெஞ்சுநாட்டு மெய்யறி வாளர். "மாந்தன் வாழவும், உணர்வு பெறவும் அழுகை தேவை"

www.thamizham.net - Free E book No 7419

என்கிறார் மற்றொரு மனவியலார். இன்பத்தின் ஆற்றலால் புதிய ஊக்கத்தையும் திறனையும், சீரான மூச்சோட்டத்தையும், குருதி ஓட்டத்தையும், முகமலர்ச்சியையும் பெறமுடியும். ஆனால், துன்பத்தின் ஆற்றலோவெனில் இவற்றிற்கு எதிரிடையானது. இதனால், இன்பத்தின் ஆற்றல் மாந்தனை வளமுறுத்துகிறது எனவும், துன்பத்தின் ஆற்றல் அவனைத் துயரப்படுகுழியில் வீழ்த்திவிடுகிறது எனவும் அறியலாம்.

இன்ப துன்பங்களுக்கான வேறுசில ஏதுக்கள்:

அ. குமுகாய ஏதுக்கள்: சில குமுகாய ஏதுக்கள் இன்பமும் துன்பமும் தரவல்லன. அவை பேச்சும், விளையாட்டும்; ஒழுக்கமுமாம். நான்கு பேரோடு உரையாடுவது இன்பந்தான்; அதுவே நீளின் துன்பமாகிவிடும். காற்பந்து, கைப்பந்து, ஓட்டம் ஆட்டம் போன்ற விளையாடல்கள் மாந்தர்க்கு மகிழ்ச்சி விளைவிப்பது மெய்யே. ஆடல்களுக்கு இடையூறு எழின் துன்பமே. ஒழுக்கமே பேராண்மை என்று தமிழிலக்கியங்கள் பேசுகின்றன. ஒழுக்கமுடையாரை உலகம் போற்றுகிறது. காந்தி அடிகளே இதற்குக் கண்முன் கரியாவார். ஒழுக்கம் பொய்த்தமையால் ஒப்புயர்வற்ற மாமறவர் பலரும் இழுக்கிற்கு ஆளானார். எனினும், இன்றைய தமிழகக் குமுகாய வாழ்வில் ஒழுக்கங் கெட்டவனும், தீயவனும் உயர்புகழ் பெறுவதைப் பண்புடையார் ஆராய்தல் வேண்டும்.

ஆ. அறிவு ஏதுக்கள்: கண்டுபிடிப்புகளும் பிறவும் அறிவின் செயல்கள் அவை மாந்தர்க்குத் துணைநின்று இன்பம் சேர்க்கின்றன. விளக்குக் கண்ட அறிவியலார் வேட்டகத்தைக் கண்டதும், வானவூர்தியைப் படைத்தவர் ஏவுகணையைச் செய்ததும் பிறவும் முறையே அறிவுவழி இன்ப துன்பங்களுக்கு அடிகோலிவிட்டன. அஃகி அகன்ற அறிவு பெற்றவன் களிக்கிறான்; இது மெய்யே. ஆனால், மிகுதியான அறிவால் பைத்தியமானவரும் உண்டு. அறிவென்பது கருவி என்பர். கருவி நன்மை தீமை இரண்டிற்கும் துணைபோவதே. அதுபோல் அறிவும் இன்ப துன்பங்களுக்கு ஏதுவாகிறதென உணரலாம்.

புறத்துன்பம்: புறத்துன்பம் மூன்று வகைகளில் நேரலாம். ஒன்று குத்தல்; மற்றது கிள்ளல்; ஏனையது எரிச்சல். இம்மூன்றனுள் புறத்திற்கு மிக்க துன்பந்தருவது எரிச்சலே. புறத்துன்பத்தால் அகத்திலும் புறத்திலும் சில விளைவுகள் ஏற்படுகின்றன. அகவிளை

வுகள் வருமாறு:- அரத்த அழுத்தம் மிகும்; நெஞ்சாங்குலை மேலோடுகளிலிருந்து ஒருவகை நீர் மிகுதியாகச் சுரக்கும்; மூச்சுத் தடுமாற்றம் உண்டாகும்; நெஞ்சத்துடிப்பு மிகும். புறவிளைவுகளாவன: ஓலம் மிகும்; கண்ணீர் பெருகும்; கைகளும், விரல்களும் சுருங்கும்; விற்புருவங்கள் நெருங்கி நேரெழும்; முகம் வெளுக்கும்.

புறத்துன்பம் உடலை ஊறினின்றும் காக்கிறது. மழை வருமுன்னர் மாந்தன் கைக்குடை கொள்கிறான்: பசித்துயர் கண்டு உண வருந்தி உயிரையும், உடலையும் ஓம்புகிறான். இவ்வாறே ஒவ்வோர் உயிரும் புறத்துன்பத்தால் தன்னைக் காத்துக்கொண்டு வந்திருக்கின்றது. இனி, புறத்துன்பம் மட்டும் அன்று; புற இன்பமும் உடலுக்குத் துன்பந்தருவதுண்டு என்பது உளவியலார் கொள்கை.

அகத்துன்பம்: அ. மாறுபட்ட பயன்: நமது ஆற்றலுக்கு மாறுபட்ட பயன் கிடைத்தால் நமக்குத் துன்பம் உண்டாகிறது. சான்று: தேர்வில் தேர்ச்சி பெறுமை, எண்ணிய எண்ணியாங்கு எய்தப் பெறுமை முதலியன. ஆ. உள்ளத்தைத் தாக்குவன: மனத்தைத் தாக்கும் நிகழ்ச்சிகள் பெருந்துயர் தருவது இயற்கையே. அவை: அன்புடையார் பிரிவு, அவர் இறப்பு, நண்பர்களின் இரண்டகம், இன்ன பிற. இ. மனச்சான்று பொய்த்தல்: அறிகரி பொய்த்தல் அருந்துயர் தரும், மனச்சான்றுக்கு மாறுபடுதல் மனத்துன்பத்தை மிகுவிக்கும். நல்லாரை வஞ்சித்தல், பொய்க்கரி சொல்லிப் பிறரைக் கொல்வித்தல், பிறன் பொருள் வேட்டல் இவைபோன்ற பிறவும் துன்பந் தருவன. ஈ. அறிவுத்துன்பம்: அறிவுத் துன்பமும் அகத்துன்பம் தரும். சான்று: கற்றவற்றை நினைவில் கொண்டுவர முடியாமை, பொருள் விளங்கிக்கொள்ள இயலாமை போல்வன. உ. குமுகாயத் துன்பம்: குமுகாயத் துன்பமும் மனத்துன்பம் பயக்கும். சான்று: ஒப்பெடுப்பில் தேர்ந்தெடுக்கப்படாமை, மேடையில் பேச முடியாமல் திணறல், பலர் முன்னிலையில் இழிவுபடுத்தப்படுதல் போல்வனவாம்.

புறஇன்பம்: மெய், வாய், கண், மூக்கு, செவி எனச் சொல்லப்பட்ட ஐம்பொறிகளால் பெறப்படும் இன்பங்கள் அனைத்தும் புற இன்பங்களே. தென்றலைத் தழுவல், தேனினை மாந்தல், மலைவளங்காண்டல், மல்லிகை மோத்தல், யாழோசை மடுத்தல் எனும் இவை புற இன்பம் தருவன.

www.thamizham.net - Free E book No 7419

அகஇன்பம்: பொதுவாக அகமும் புறமும் சேர்ந்தே இன்ப முறும். ஒரு பாடலுக்கு அமைந்த பண் செவிக்கு இன்பம் தருகிறது; அப்பாடலின் கருத்து அப்பொழுதே மனத்திற்கும் இன்பந் தந்துவிடு கிறது. கூத்து, உரையாடல் போல்வனவும் இவ்விருவகை இன்பங் களையும் தரவல்லனவே, ஆயினும் சிறப்புவகையால் மனம்மட்டுமே இன்பம் உறுதல் உண்டென்பது உறுதி, வறியார்க்கொன்று ஈதல், பசித்து வந்தானுக்குச் சோறிடல், தனக்கென முயலாது பிறர்க்கென முயலல், பொதுநலத்தின் பொருட்டுத் தன்னலம் மறுத்தல் இன்ன பிறவும் உள்ளத்திற்கே உவகை பயந்து நிற்பனவாம்.

பயன்கள்: இன்ப துன்பங்களின் பயன்களைக் குறித்து உள வியலார் மாறுபடுகின்றனர். ஒருசாரார் உலக உயிரினங்களைப் பாது காத்தல் பொருட்டே இன்ப துன்பங்கள் இறைவனால் படைக்கப்பட் டன என்பர். இனிப் பிறிதொரு சாரார் துன்பம் இன்பத்தையும், இன் பம் துன்பத்தையும் மாறுபட்டுத் தரக்கூடியவை யாதலின் முன்ன வர் கூற்றுத் தவறென்பர். எவ்வாறெனில் கொடிய நோயைப் போக்கும் நன்மருந்து முதலில் கசந்தாலும், இறுதியில் உயிரைக் காக்கிறது; கள் போன்ற மதிமயக்கும் குடிவகைகள் தொடக்கத்தில் இன்பம் தரினும், முடிவில் பெருந்துன்பத்தைவிளைக்கின்றன என்பன அவர் காட்டும் சான்றுகள். எவ்வாறுயினும், மாந்த வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் நீங்கா இடம் பெற்றுள்ளன என்பது ஒருதலை. O

தென்மொழி-கடலூர்-1.

[உலகத் தமிழ்க் கழகச் செய்திகள் முழுமையாகத் தொடர்ந்து வரும் ஒரே இதழ்]

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா.	13 உருபா.
தனி இதழ் :	75 காசு.	90 காசு.	1 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா 50 காசு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

www.thamizham.net - Free E book No 7419

செய்தியும் அறிக்கையும்

செய்தி எண்:
உ. த. க. 9/2000

கீழ்க் காணும் ஊர்களில் உலகத் தமிழ்க் கழகக் கிளைகள் தொடங்கப்பெற்றுச் செயற்பட்டு வருகின்றன. ஆங்காங்குள்ள அன்பர்கள் விரும்பின், அவற்றில் உறுப்பினராகச் சேர்ந்து, நாட்டுத்தொண்டும் மொழிப்பணியும் புரியுமாறு கேட்டுக்கொள்கிறோம்,

க. தென்னார்க்காடு மாவட்டம்.

(அ) அண்ணமங்கலம் ஊர்க்கிளை: தொடக்கம்: கன்னி—உ0. தலைவர்: திரு. இரா. கண்ணப்பன்; செயலர்: திரு. பெ. வேங்கடாசலம்; பொருளர்: திரு. சே. செல்லப்பெருமாள்.

(ஆ) முதனை ஊர்க்கிளை:- தொடக்கம்: துலை—ச. தலைவர்: திரு. பொன். பிச்சைமுத்து; அறி. இ., ப. இ; செயலர்: திரு. நா. இராமாநந்தம்; அறி. இ; பொருளர்: திரு. வை. சோதி.

(இ) நெய்வேலி–மேலக்கிளை: தொடக்கம்: துலை—கக. தலைவர்: திரு. இரா. அப்பாவு; பொறி. இ; செயலர்: திரு. செ. மேதலைவன்; பொருளர்: திரு. கோ. தங்கவேலு.

(ஈ) நெய்வேலி–நடுக்கிளை: தொடக்கம்: 2–11–69. தலைவர்: திரு. இலக்குவன்; செயலர்: திரு. கருப்பையா; பொருளர்: திரு. அழகப்பன்.

(உ) நெய்வேலி-2—கிளை: தொடக்கம்: 2–11–69. தலைவர்: திரு. சோழன்; செயலர்: திரு. பெருந்தேவன்; பொருளர்: திரு. அருள்நெறி.

www.thamizham.net - Free E book No 7419

(ஊ) கங்கைகொண்டான் கிளை: தொடக்கம்: 2-11-69. தலைவர்: திரு திருமாறன்; செயலர்: திரு. மணிவண்ணன்; பொருளர்: திரு. இளஞ்செழியன்.

(எ) புதுவேப்பங்குறிச்சி கிளை: தொடக்கம். 2-11-69. தலைவர்: திரு. இளங்கோ; செயலர். திரு. அண்ணல்தங்கோ; பொருளர்: திரு. பரிதியோன்.

(ஏ) நாயனூர்பாளையம் கிளை: தொடக்கம்: 2-11-69. தலைவர்: திரு. நெடுமாறன்; செயலர்: திரு. அண்டிரன்; பொருளர்: திரு. அரணமுறுவல்.

உ. கோவை மாவட்டம்

(அ) சேலூர்க் கிளை: தொடக்கம்: கன்னி-உஅ. தலைவர்: திரு. க. காந்தி; செயலர்: திரு. நடராசன் வேலுசாமி; பொருளர்: திரு. க. சென்னியப்பன்.

(ஆ) அண்ணூர்க் கிளை: தொடக்கம்: 18-10-69. தலைவர்: திரு. ந. சுப்புக்குட்டி; செயலர்: திரு. அன்புத்தென்றலன்; பொருளர்: திரு. திருவேங்கடம்.

௩. முகவை மாவட்டம்

அ. நெடுங்குளம் ஊர்க்கிளை: தொடக்கம், 30-10-69. தலைவர்: திரு. க. பா. பாண்டியன்; செயலர்: திரு. காயாம்பூ; பொருளர்: திரு. இரா. முத்துக்காரி.

ச. தஞ்சை மாவட்டம்

(அ) கள்ளப்பிரம்பூர்க்கிளை: தொடக்கம்: 8-10-69. தலைவர்: திரு. க. நாகலிங்கம்; செயலர்: திரு க. அ. கிருட்டிணமூர்த்தி; பொருளர்: திரு. கு. தங்கையன்.

(ஆ) செங்கிப்பட்டி ஊர்க்கிளை: தொடக்கம்: 19-10-69. தலைவர்: திரு. ம. சிவ. சிவகடாட்சம்; செயலர்: திரு. கு. தாமசு; க. இ. பொருளர்: திரு. வே. ஆசீர்வாதம்.

ரு. சேலம் மாவட்டம்

தாரமங்கலம் ஊர்க்கிளை: தொடக்கம்: துலை-உ0. தலைவர்: புலவர். திரு. ப. பெரியசாமி; செயலர்: திரு. பு. அ. குமரவேலு; பொருளர்: திரு. பெ. சவுந்தரம்.

www.thamizham.net - Free E book No 7419

க. பிற உ. த. க. செய்திகள்

1. தெ. ஆ. மாவட்ட நெய்வேலி உ. த. க. கிளையின் சார்பில், நிகழும் தி. பி. 2000, துலை-10 ஞாயிற்றுக்கிழமை திருவள்ளுவர் ஈராயிரம் ஆட்டைவிழா வட்டம் கஎ-இல் உள்ள பொறியியலாளர் கழக அரங்கில் நிகழ்வுற்றது. காலை 9-30 மணியளவில் செயற்பொறியியலாளர் திரு. வி. இராமாநுசம், பொறி. இ. அவர்கள் தலைமையில், நினைவுக்கலை யேந்தல் புலவர். திரு. பெ. இராமையா அவர்களின் திருக்குறள் எண்வகையாற்றலைப் புலப்படுத்தும் வியத்தகு செயல்கள் நிகழ்த்தப்பெற்றன மாலை 6-மணிக்குத் திரு. என். கே. விநாயகம் (நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிக் குழுமத்தின் ஆட்சி முதல்வர்) அவர்களின் தலைமையில், திரு. தமிழ்மணி, பொறி. இ. அவர்கள் "இறவாப் புகழ்" என்னும் பொருள்பற்றியும், உலகத் தமிழ்க் கழகப் பொருளாளர் திரு. செங்கை. செந்தமிழ்க்கிழார் க. இ., ப. இ. அவர்கள் "வாழ்ந்து காட்டுவோம்" என்னும் பொருள்குறித்தும், உலகத் தமிழ்க்கழகப் பொதுச்செயலாளர் பாவலர். திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் "தி. பி. நான்காயிரம்" என்னும் பொருள் பற்றியும் சொற்பெருக்காற்றினார்கள். திருக்குறள் போட்டிகளும் பரிசளிப்பும் நிகழ்ந்தபின், விழா இனிது முடிவுற்றது.

2. கருநாடக மாநிலத்தைச் சேர்ந்த பெங்களூர் உலகத் தமிழ்க் கழகக் கிளையின் சார்பாகக் கன்னித் திங்கள் கரு-ஆம் நாள் (2—10—69) நடந்த கூட்டத்தில் சென்னைப் பல்கலைக்கழக அகர முதலியைத் திருத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள, துணை வேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களைக் கேட்டுக்கொள்ளும் வகையில் தீர்மானம் நிறைவேற்றி விடுக்கப்பட்டுள்ளது. துலை உ-ஆம் நாள் நிகழ்ந்த கூட்டத்தில், அடுத்த ஆண்டு பாரிசில் நடக்கவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டிற்கு மொழிமுதறிஞர் திரு. பாவாணர், "தென்மொழி" ஆசிரியர் திரு. பெருஞ்சித்திரனார் ஆகியோரை அனுப்புமாறு, தமிழ்நாடு அரசின் கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்களைக் கேட்டுக்கொள்ளும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 26—10— 69-இல் கல்வியமைச்சர் பெங்களூர் சென்றிருந்தபோது, அத்தீர்மானத்தின் படியொன்று ஷெ கிளைக் கழகத்தினரால் அவரிடம் தரப்பட்டது. ஆவன செய்வதாக அமைச்சர் கூறியுள்ளாரென அறிகிறோம்.

www.thamizham.net - Free E book No 7419

அறிக்கை எண். உ. த. க. 8/2000

1. உ. த. க. முதல் ஆண்டு விழா–திருவள்ளுவர் ஈராயிர மாண்டு விழா மாநாடு, மாணவர்கள் ஆசிரியர்கள் பலரின் வேண்டுகோளுக்கும் ஏந்துகளுக்கும் ஏற்ப, சிலைத்திங்கள் 12, 13 (27–12–69, 28–12–69–காரி, ஞாயிறு) ஆகிய நாட்களில் நடத்துவதென உறுதி செய்யப்பெற்றுள்ளது. மாநாட்டினை மிகச் சிறப்பாக நடத்துவதெனை மாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களும் விழாக்குழுவினரும் அரும்பாடுபட்டு முயன்று வருகின்றனர். எல்லா மாவட்ட அமைப்பாளர்களுக்கும் நன்கொடை திரட்டுவது தொடர்பாக வேண்டுகோள் அறிக்கைகளும் தலைமையகத்தினின்று கட்டளை மடல்களும் முன்னரே விடுக்கப்பெற்றுள்ளன. நன்கொடை திரட்டும் முயற்சிகளும் ஆங்காங்கே நடைபெற்று வருவதாக அறிந்து பெரிதும் மகிழ்ச்சி யடைகின்றோம். இதுவரை முயற்சியில் பின் தங்கியுள்ள மாவட்ட அமைப்பாளர்கள் முடுக்கமாக ஈடுபட்டுத் தம் பங்கினை விரைந்து திரட்டி திரு. சுதி. அறவாழி, மாநாட்டுப் பொருளாளர், உ. த. க. பறம்புக்குடி, முகவை மா. வ. என்னும் முகவரிக்கு விடுக்கக் கேட்டுக் கொள்கின்றோம்.

2. பறம்புக்குடியில் திசம்பர் 27 28–ஆம் பக்கல்களில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் உ. த. க. உறுப்பினர்கள் யாவரும் தம்மைச் சார்ந்த குடும்பத்தினருடனும் தமிழ் அன்பர்களுடனும் மாநாட்டிற்குத் தவறுமல் வந்திருந்து அங்கு நடைபெற விருக்கும் அரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்குமாறு வேண்டிக்கொள்கின்றோம். ஆங்காங்குள்ள தமிழ் அன்பர்களும் உ. த. க. உறுப்பினர்களும் ஒருங்கிணைந்து தனி உந்துகள் அமர்த்திக்கொண்டும், "தூய தமிழ் வளர்ப்போம்', "தொல்புகழ் மீட்போம்" "உலகத் தமிழ்க் கழகம் உண்மைத் தமிழ்க் கழகம்" "உ. த. க. வில் உறுப்பினர் ஆகுங்கள்" "மொழியடிமை நீக்குவோம்! முத்தமிழைக் காப்போம்", "இன அடிமை நீக்குவோம்; எந்தமிழைக் காப்போம்", "அரசடிமை நீக்குவோம்; அருந்தமிழைக் காப்போம்" போன்ற முழக்கங்களை முழக்கிக் கொண்டும் கூட்டங் கூட்டமாகப் பறம்புக்குடிக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். அமர்த்தப் பெற்ற உந்து வண்டிகளில் தங்கள் கிளைக்கழகப் பெயர்பொறித்த பெரிய துணிகளையும், உ. த. க. முத்திரை பொறித்த நீலக் கொடிகளையும் கட்டிக்கொண்டு வரவேண்டுமாய் அன்பர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

www.thamizham.net - Free E book No 7419

3 அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் திரவிட மொழிகளின் ஒப்பியல் பற்றிய கருத்தரங்கு 14—11—69 முதல் மூன்று நாட்கள் நடந்தன. இக் கருத்தரங்கில், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னுள் மொழியியல் துறைப் பேராசிரியரும், திரவிடமொழி ஆராய்ச்சியில் தலைசிறந்தவரும், உலகத் தமிழ்க் கழகத்தின் தலை வரும் ஆகிய பேராசிரியர் திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்க ளைக் கலந்து கொள்ள அழைப்பு விடுக்குமாறு கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை உ. த க வின் அனைத்துக் கிளைக் கழகங்களும் நிறைவேற்றிக்கருத்தரங்கின் நெறியாளர் பர். அகத்தியலிங்கம் அவர் களுக்குக் குறித்தகாலத்திற்கு முன்பே முறைப்படி விடுத்தன. அவற் றின் படிகள் தமிழக முதலமைச்சர்க்கும், கல்வி அமைச்சர்க்கும் பிற துறை யமைச்சர் ஒரிருவர்க்கும் விடுக்கப் பெற்றன. ஆனுல் பயனே தும் விளையவில்லை.

கருத்தரங்கு பாவாணர் இல்லாமலேயே நடந்து முடிந்தது. இக் கருத்தரங்கில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொள்ளாத உயர் நிலைப்பள்ளிக் குழந்தைகளுக்குத் தமிழ்ப் பாடநூலை எழுதுவதற்காக இந்நிலையத்திற்கு நடுவணரசால் ஓர் இலக்கம் (1,00,000) உருபா கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழி வளர்ச்சிக்கு மாருக நடக்கும் திட்டத்திற்காக நடுவணரசு இந்த ஆராய்ச்சி நிலையத்திற்கு ஓரிலக் கம் தருகிறதென்ருல் தமிழ்மொழியின் கேட்டுக்கு அவ்வரசு மறைமுக மாக எவ்வாறு துணை செய்கின்றது என்பதை உண்மைத் தமிழன்பர்கள் உணர்வார்களாக.

திரவிடமொழியாராய்ச்சிக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்த சென்னைப் பல்கலைக் கழகக் கன்னடப் பேராசிரியர் எம். எம். பட். தம் தொடக்கவிழாவில், "மொழிகளின் அமைப்பை ஆராய்வதன் வழி நாட்டில் பரவியுள்ள மொழி வெறியை அகற்றிவிட முடியும்" என்று குறிப்பிட்டுள்ளார் என்பதையும் அன்பர்கள் கவனிப்பார்களாக. அவர் குறிப்பிட்ட மொழிவெறி என்பது தனித்தமிழ் வளர்ச்சியைச் சுட்டுவ தாகவே பொருள்படும்.

திரவிடமொழிக் கருத்தரங்கு என்ற பெயரால் வையாபுரி வழித் தமிழ்ப் பேராசிரியர்கள் எவ்வாறு நடுவணரசுக்குக் கங்காணிகளாக ஆகியுள்ளனர் என்பதையும், அவர்கள் பாவாணர் போன்ற முற்றக்

www.thamizham.net - Free E book No 7419

கற்ற மொழிநூற் பேராசிரியர்களை எவ்வாறு புறக்கணிக்கின்றனர் என்பதையும், தமிழ் வளர்ச்சிக்கு எத்துணை வகையில் மறைமுகக் கேடு சூழ்ந்துள்ளது என்பதையும், இவற்றைப்பற்றி யெல்லாம் தமிழக அரசு துளியும் கவலைப்படாத நிலையினையும் தமிழன்பர்கள் உன்னிப்பாகக் கவனித்துவர வேண்டுகின்றோம்.

இந்த ஆராய்ச்சிக் கருத்தரங்கின் முடிபுகளை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்பதனையும், அவற்றைக் கண்டித்தும் அண்மையில் நடைபெறவிருக்கும் உ. த. க. மாநாட்டில் தீர்மானம் கொண்டு வரப்படும். உ. த. க. மாவட்ட அமைப்பாளர்களும், கிளைக் கழகங்களும் இத்தகைய சூழ்ச்சிகளை ஆங்காங்குள்ள பொதுமக்களுக்கு அறிவிப்பதுடன் ஆராய்ச்சிக் கருத்தரங்கில் பாவாணரைக் கலந்துகொள்ளச் செய்யாத புறக்கணிப்பைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றித் தமிழக முதலமைச்சர்க்கும் நடுவணரசுக் கல்வியமைச்சர்க்கும் கருத்தரங்கு நெறியாளர்க்கும் விடுத்துவைக்கக் கேட்டுக்கொள்கின்றோம்.

4. வரும் திசம்பர் மாநாட்டிற்குள் ஒவ்வொரு மாவட்டமும் குறைந்தது இருபதிருபது கிளைக் கழகங்களையும், இரண்டிரண்டு வட்டக் கழகங்களையும் தோற்றுவிப்பதில் பெருமுயற்சி எடுத்துக் கொள்ளுமாறு முந்தைய அறிக்கையிலேயே கேட்டுக்கொண்டிருந்தோம். அதன்படி தென்னார்க்காடு மாவட்ட அமைப்பாளர் திரு. த. மொழிக்கரசு அவர்களும், சேலம் மாவட்ட அமைப்பாளர் புலவர். திரு. சின்னுண்டார் அவர்களும் முழுமூச்சில் ஈடுபட்டு அவரவர்தம் மாவட்டங்களில் ஆங்காங்கே சில கிளைக்கழகங்களைத் தோற்றுவித்துள்ளனர். இனியும் விரைந்து செயலாற்றுவதாக நமக்கறிவித்துள்ளனர். அவர்களைப் பாராட்டுவதுடன் பிறரையும் அவர்போல் முனைந்து ஈடுபடக் கேட்டுக்கொள்கின்றோம்.

5. மாநாட்டு நடவடிக்கைகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. சிற்றறிக்கைகளும் சுவரொட்டிகளும் அடிக்கப்பெற்று விரைவில் மாவட்ட அமைப்பாளர்களுக்கும் தமிழன்பர்களுக்கும் விடுத்து வைக்கப்பெறும். சுவரொட்டிகளை நகரிலுள்ள பார்வையான இடங்களிலும் கல்லூரிக் கண்மையிலும் இணைத்திணைத்து ஒட்டி நன்கு விளம்பரம் செய்யக் கேட்டுக்கொள்கின்றோம். சிற்றறிக்கைகளை

www.thamizham.net - Free E book No 7419

மாணவர்களிடத்தும், ஆசிரியர்களிடத்தும், தமிழ் மன்றங்கள், படிப்பகங்கள் முதலியவர்களிடத்தும் கிடைக்குமாறு அன்பர்கள் ஏற்பாடு செய்தல் வேண்டும். விடுக்கப்பெற்ற அறிக்கைகளுக்கு மேலும் தேவைப்பட்டால். உடனுக்குடன் மாநாட்டுச் செயலர் திரு. பறம்பை அறிவன் (வட்டத் தலைவர், உ. த. க. பறம்புக்குடி வட்டக்கழகம்) பறம்புக்குடி என்ற முகவரிக்கு எழுதித் தருவித்துக்கொள்ளல் வேண்டும்.

6. மாநாட்டிற்கெனத் திரட்டவேண்டிய நன்கொடைக்கான தலைமைக்கழக இசைவு பொதுப்பட எல்லாக் கிளைக்கழகங்களுக்கும், வட்டக் கழகங்களுக்கும் வழங்கப்படுகின்றது என்பதை இதன்வழி அறிவித்துக் கொள்கின்றோம். இவ்விசைவு திசம்பர் மாத முடிவுவரை செல்லுபடியாகும். இதற்கான இசைவு எண் 13/2000 நாள்-நளி 2. (17—11—69).

மே/பா. தென்மொழி
கடலூர்-1.

பெருஞ்சித்திரன்,
பொதுச்செயலாளர், உ. த. க.

தென்மொழி!

வந்தது தென்மொழி; மண்டு தமிழ் மணத்தைத்
தந்ததுவால்! என்மொழியைத் தந்தேன்காண் — உந்துமென்
உள்ளத் துணர்வை யுயிரை உடல் சேர
அள்ளித் தழுவுமால் ஆங்கு!

மொழியடிமை நீக்க முளைத்த கதிராய்ப்
பழிவடவர்ச் சாய்க்கப் படையாய் — விழிதமிழா!
என்றிங்கே நாளும் இடிக்குங் கடிமுரசாய்
முன்னின்ற தேதென் மொழி!

கழிநடையர் வாழ்வுக்கோ கத்தரிக்கோல்; தாளில்
இழிநடையர் வீழ்வுக்கோர் ஈட்டி — கழிசடையாய்
நூலேந்து மேனியர்க்கோ நோயடுதீ; எம்மவர்க்கோ
மேலாந்தாய்ப் பால்தென் மொழி!

மன்றி லமர்ந்தாக்கும் மக்கள் நலத்திற்கும்
நன்று யிடித்துரைக்கும் நட்பாகி — ஒன்றுன
செந்தமிழின் பேரால் திருவிடத்தார் ஒன்றுபட
முந்துமுழக் கேதென் மொழி!

எத்தனையோ கட்சி இதழ் விரித்தும் தாய்மொழியை
எத்துணையும் போற்றுமல் இற்றனவே — மெத்தவொன்றே
மன்றி லமர்ந்ததுவே மாத்தமிழால் இங்கினியாம்
ஒன்றுமிட மேதென் மொழி!

-முத்தம். பாளையங்கோட்டை.

www.thamizham.net - Free E book No 7419

தமிழியக்கப் பாசறை.

கற்கின்ற இருபாலீர்!

மொழியே விழிகள் என்று முனைந்து நின்று மொழித்தொண்டாற்றிய அறிஞர் பலர்! மறைமலையடிகள் அவர்களால் விதைக்கப் பெற்று மறத்தமிழன் பாரதிதாசன் அவர்களால் வளர்ச்சியுற்று வாழ்வு பெற்ற தனித்தமிழ் உணர்ச்சி, இன்று பாவாணர், பெருஞ்சித்திரனார் போன்ற அறிஞர்களால் எழுச்சி கொண்டுள்ளது. வீழ்ச்சியுற்ற நேரத்திலே சிதறுண்டு தவித்த தமிழ் நெஞ்சம் இன்று ஒன்றுபட்டு உயர்ந்திருக்கிறது. தெருவெல்லாம் தமிழ் முழங்கக் கனவு கண்டது நனவாகிவிடும் என்ற நம்பிக்கையும் வளர்ந்து வருகின்றது. இத்தகைய எழுச்சியும், ஏற்றமும், ஏற்படுத்திய விழிப்புணர்ச்சி, தனித்தமிழ் அன்பர்கள் ஒன்றுசேர்ந்து, செயல்பட வேண்டியதைச் சுட்டிக்காட்டுகின்றது.

தனித்தமிழ் உணர்ச்சிக்கு முதலிடம் கொடுத்துத் தமிழுக்கு வளர்ச்சியும், தமிழில் பிறமொழிக் கலப்பிற்குத் தளர்ச்சியும் ஏற்படுத்துவதை வரவேற்கின்ற மாணவ உள்ளங்கள் பல! அவ்வுள்ளங்கள் இணைந்தால் எழுகின்ற பகைமூட்டங்கள் கலைவது உறுதி, பேச்சிலும், எழுத்திலும் தனித்தமிழ் வளர்வது எளிதே! இவ்வெண்ணத்தோடு நாங்கள் "தமிழியக்கப் பாசறை" அமைத்துள்ளோம். எங்களைப் போன்று ஒருங்கிணைந்து செயல்படத் துடிக்கின்ற மாணவர்கள் பலர் ஆங்காங்கே இருப்பர். அவர்கள் எல்லாம் தமிழியக்கப் பாசறைகளைத் தொடங்க வேண்டும். பின்னர், மாநில அளவில் நாம் இணைந்து செயல்பட்டால் தமிழியக்கம் வலுப்பெறும்,

எனவே, கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் கற்கின்ற மாணவர்கள் விரைவில் ஆங்காங்கே பாசறைகளைத் தொடங்க வேண்டுகிறோம். பின் எல்லாப் பாசறைகளையும் இணைத்துத் தமிழக அளவில் சேர்ந்து செயல்படுவோம், மொழியியல் அறிவு முன்னேறிச் செல்லும் இக்காலத்திலும் கூடப் பிறமொழிப் பற்றாளர்களாய் வளர்ந்தும்—அடிமைகளாய்க் கிளர்ந்தும் செயல்படுகின்ற போக்கைப் போக்க வேண்டும். தமிழ் உணர்ச்சி எல்லா மாணவர்களிடையேயும் பரந்து கிடக்கின்றது. அவ்வுணர்ச்சிக்கு எழுச்சியூட்டித் தனித்தமிழ் வளர்க்க வேண்டும். எழுத்திலும், பேச்சிலும் தனித்தமிழ் கமழச் செயல்பட வேண்டும்,

"தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே" என்ற பாவேந்தர் ஆணைப்படி நாம் இணைந்து செயல்படுவோம், எழுச்சியோடு 'தமிழியக்கப் பாசறை' அமைக்கின்ற எம்மோடு தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

"கெஞ்சுவதில்லை பிறர்பால்; அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை; எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை; உலகில் எவரும் எதிர்நின்றே"

தொடர்பு கொள்ள:
தமிழியக்கப் பாசறை,
41, உமையாள் விடுதி,
காரைக்குடி-3.

இவண்,
தமிழியக்கப் பாசறை,
அழகப்பர் கல்லூரி,
காரைக்குடி-3.

www.thamizham.net - Free E book No 7419

ஒரு தமிழ் வரலாற்றுக் குமுகாயப் பொதுமைக் கருத்தினராகக் கொள்வார்களாக! தாங்கள் ஒரு பொதுவுடைமைக்காரரோ என எண்ணத்தக்கவகையில் சீரிய முறையில் தலையாய ஆசிரியவுரை தீட்டி விளக்கம் அளித்தமைக்கு என்போன்ற பொதுவுடைமைத் தமிழன்பர் தலைவணங்கி நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளார் எனக்கூறிக் கொள்கிறேன்.

—பழ. அருள்குமார், நாச்சியார்கோயில்.

156: தங்களின் ஆசிரியவுரையைக் கண்ணுற்றுத் தாங்கள் 'பொதுவுடைமைக் கட்சி'யைச் சேர்ந்தவரோ என ஐயுறுகின்றேன். 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது'. பொதுவுடைமைக் கொள்கை நல்ல, பசுமையான, விரும்புதற்குரிய போற்றற்குரிய கவர்ச்சியான ஒன்றுதான். ஆயினும், நடைமுறையில் எந்தக் கட்சியினரால் அவை செயலாக்கப்படுவதில்தான் பல கோளாறுகள். உண்மையிலேயே, இவ்வுலகிலேயே கொள்கையைத் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ள தூய்மையான நேர்மையான விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில உண்மைப் பொதுவுடைமையாளர்களுள் தாங்களும் ஒருவர் எனின் உண்மைக்குப் புறம்பானதன்று. தங்களை இனம்கண்டு கொண்டு பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்தவர்கள் தாங்கள் குறிப்பிட்ட வழிமுறைப்படி நடப்பார்களேயாயின் நம் நாடெங்கும் விரைவில் பொதுவுடைமைப் பூங்கா பூத்துக் குலுங்கி மணம் வீசும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தங்கள் ஆசிரியவுரை,செஞ்சட்டை அணிந்துகொண்டு,தன்னைப் 'பொதுவுடைமைக்காரன்' என விளம்பரப் படுத்திக்கொண்டு அலைகின்ற ஒவ்வொரு தன்னலமியும் படித்து, ஆய்ந்து, உணர்ந்து அதன் வழி நடந்துகொள்ள வேண்டுவதாக அமைந்துள்ளது. "வர்க்கப் போராட்டம்; 'பூர்சுவா', 'யதார்த்தம்', 'தத்ரூபம்',–அது இதென்று புரியாத, அந்தக் காலத்தில் தமிழில், மொழியாக்கப்பட்ட பொதுவுடைமை நூல்களில் கையாளப்பட்ட வடமொழிச் சொற்களைத்தான் கையாளல் வேண்டும். அவற்றை மாற்றக்கூடாது. அவைதாம் சொல்லவேண்டிய கருத்தை, அதே தன்மையில் வெளிக்காட்டுகின்றன"—என்று விடாப்பிடியாக முரட்டுத் தன்மையுடன் திரிகின்ற. தொழில் ஒன்றியம் போன்றவற்றில் தனக்கென எப்படியோ, ஒரு செல்வாக்கைப் பிடித்துக்கொண்டு, தானும், தன்னைச் சார்ந்தோரும் தான் தொழிலாளரின் நலனைக் காப்பதற்கென்றே பிறந்தவர்கள் என்ற நினைப்பில் வாய்த் தம்பட்டம் அடித்துக் கொள்ளும் ஒவ்வொரு. 'காம்ரேடும்' ('காம்ரேடு' என்று குறிப்பிட்டால்தான் அவர்களுக்குப் பொருந்துமாம்) இந்த ஆசிரியவுரையினை நன்கு கற்றுவிட்டு உண்மைப் பொதுவுடைமைத் தோழர்க மாறவேண்டும்

"மாசுகோவில் இடி இடித்தால்தான் மன்னார்குடியில் மழை பொழியும்" என்ற எண்ணத்தில் இருக்கும் சிலதுகளும், 'மாசேதுங் தும்மினால் மானாமதுரையில் கண்ணீர்விடும்' சிலதுகளும் இனியாவது தாங்கள் பிறந்தது தமிழகம், தமிழ் மண்ணில் என்றும், வாழ்வது தமிழ்நாட்டில் என்றும் மாளப்போவதும் தமிழகத்திலேயே தான் என்றும் எண்ணி, உண்மையில் பொதுவுடைமையாளர்களாகட்டும்.

குமுகாயச் சீர்கேடுகள் எத்தனை மலிந்து கிடக்கின்றன? மொழி வல்லாண்மை எவ்வளவு வலுப்பெறுகிறது? இதனைப்பற்றியெல்லாம்

(அடுத்தபக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7419

ஏதாவது எந்த ஒரு 'காம்ரேட்'டாவது எண்ணியதுண்டா? பொதுவுடைமை பேசுகின்ற அந்தக் கட்சியிலேயே எத்தனை இன வல்லாண்மை! எத்தனைப் பார்ப்பனர்கள் மேல்நிலையில் உள்ளனர்! போகட்டும்! அந்தக் கட்சியில் சேர்ந்த பின்னர் எத்தனைப்பேர் இனக் குறிப்பு காட்டும் பூணூலை அறுத்தெறிந்து விட்டனர்? அல்லது இனத்தைச் சுட்டிக்காட்டும் சொல்லைப் பெயரிலிருந்து எடுத்துவிட்டனர்? மேலும் கடவுள் உருவ வழிபாடுகளை நிறுத்திவிட்டனர்? மதச் சடங்குகளைக் கொண்டாடாமல் இருக்கின்றனர்? அல்லது தமிழ் முன்னேற்றம்பற்றி ஏதாவது எண்ணியதுண்டா? சோற்றுச் சிக்கல் ஒன்று தீர்ந்துவிட்டால் மற்ற ஒன்றும் வேண்டாவா? சோற்றுக்கும் மேம்பட்டது மானம் என்பதனை இனியாவது அவர்கள் உணர்ந்து திருந்தட்டும். தமிழர்களாக வாழட்டும்!

—பெ. வெற்றிக்கூத்தன், நெய்வேலி-1.

157: தண்டமிழ்ப் பெரியீர்! சால வணக்கம். தங்களின் தனித் தமிழ்ப் பணியும்,தமிழினங்காக்கும் தகைமைமிகு பொதுத்தொண்டும் என்றும் நின்று நிலவுவனவாக. தாங்கள் பல்வேறு தொல்லைகட்கு இடையே 'தென்மொழி' இதழை நடத்துகின்றீர்கள் என்பதனை நன்கறிவேன். தங்களின் இதழ்நடத்தும் பணியிலே இடையூறும் இன்னல்களும் எத்துணையளவு வந்திடினும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது, 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்னும் பாவேந்தர் பாரதிதாசனாரின் கூற்றுக்கொப்பத் துணிந்து செயலாற்றும் தங்களின் உள்ள உறுதியும் தமிழ்நலம் பேணும் தகைமையும் பாராட்டுக்குரியனவே.

ஆயினும் தங்களின் இதழ் உரிய காலத்திலே கிடைப்பதில்லை. அதனால் தென்மொழி உறுப்பினர்கள் பலர்க்கு வருத்தம் ஏற்படுவது இயல்பே. இதழை முன்கூட்டியே வெளியிட அனைத்து வழிகளிலும் முயலுவீர்களாயின், அது தங்கட்கும் தென்மொழி அன்பர்கட்கும் பெரிதும் நலம் பயக்கும் என்பது என்னுடைய பணிவான கருத்து.

—து. சண்முகம், மு க. (தமிழ்த்துறை) புத்தனாம்பட்டி, திருச்சி.

158: தமிழுக்குப் புதுப்பொலிவும் வலிவும் ஊட்ட வந்த எழுச்சிப் பாவல! தமிழரை உண்மைத் தமிழராய் ஆக்கும் பணியிலும் அவரைத் தமிழால் பிணைக்கும் பணியிலும் தமிழ் வையத் தலைமை கொள்ளச் செய்யும் பணியிலும் தாங்கள் ஈடுபட்டுள்ளீர்கள். தங்கள் பணி உண்மைப்பணி. தன்னலங்கடிந்த தூய பணி. அது வெல்லும்! என் கூற்று உண்மை என்பதைக் காலம் சொல்லும்! சூழ்ந்து வருத்தும் இடர்கள்தாம் உட்கிடக்கும் திறமையை வெளிக்கொணரும் கருவிகள். எந்த இடரும் மலை போன்ற தங்கள் உள்ளத்தை அசைக்க இயலாது என்பதை அறிவேன். இருள்சூழ்ந்த தமிழகத்தில் ஒளிசூழச் செய்யப் புறப்பட்ட தமிழினத்தின் விடிவெள்ளியே! உங்கட்கு என் சிறிய துணை என்றும் உண்டு என்று கூற விழைகிறேன்.

—அன்புநிலவன்-பாகூர்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1,

www.thamizham.net - Free E book No 7419